பக்கங்கள்: 08

# காலைக்கதிர்

Kālaikkathir

மாலைப்பதிப்பு

சாயல் 02 வள்ளுவர் ஆண்டு 2052 வைகாசி 05 புதன்கிழமை 19.05.2021 கதிர் 61

## மாந்தையின் புதிய தவிசாளராக அ.இ.ம.கா. உறுப்பினர் தெரிவு

(ந.லோகதயாளன்)

மாந்தை மேற்கு பிரதேச சபையின் புதிய தவிசாளராக அகில இலங்கை மக்கள் காங்கிரஸ் கட்சியைச் சேர்ந்த இராமநாதன் வவுனியன் ஆதி அருணாசலம் தெரிவு செய்யப்பட்டார்.

24 உறுப்பினர்களைக் கொண்ட மாந்தை மேற்கு பிரதேச சபையில் தவிசாளர் தெரிவுக்கான

2

# ‘போர்ட் சிட்டி’ வேலைவாய்ப்பில் 75 சதவீதம் இலங்கையர்களுக்கு

## சட்டமூலத்தைச் சபையில் சமர்ப்பித்து மஹிந்த உரை; கட்சி பேதமின்றி ஆதரவு வழங்குமாறு வேண்டுகோள்



**கொழும்புத் துறைமுக நகரத்தில் உருவாக்கப்படும் வேலைவாய்ப்புகளில் குறைந்தது 75 சதவீதமாவது இலங்கையர்களுக்கு ஒதுக்கப்பட வேண்டும் என்ற திருத்தத்தை ஏற்படுத்த எதிர்பார்க்கின்றோம். எனவே, எமது நாட்டை நேசிக்கும், நாட்டின் எதிர்காலப் பயணத்தை ஆசீர்வதிக்கும் அனைத்து உறுப்பினர்களையும் கட்சி பேதமின்றி இந்தச் சட்டமூலத்துக்கு ஆதரவு வழங்குமாறு அழைப்பு விடுக்கின்றேன்.**

**- இவ்வாறு பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ, கொழும்புத் துறைமுக நகர பொருளாதார ஆணைக்குழு சட்டமூலத்தை இன்று நாடாளுமன்றத்தில் சமர்ப்பித்து உரையாற்றும்போது தெரிவித்தார்.**

2

### சி.ஐ.டியின் தடுப்புக் காவலில் இருந்த

## அஸாத் ஸாலிக்கு மாரடைப்பு வைத்தியசாலையில் சேர்ப்பு



கொழும்பு, மே 19

மேல் மாகாணத்தின் முன்னாள் ஆளுநரும் அரசியல் பிரமுகருமான அஸாத் ஸாலி மாரடைப்பு காரணமாக கொழும்பு தேசிய வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளார்.

உயிர்த்த ஞாயிறு தினத் தாக்குதல் சம்பவம் தொடர்பில் கைதுசெய்யப்பட்டு, தடுப்புக்காவலில் வைக்கப்பட்டிருந்த நிலையிலேயே அஸாத் ஸாலிக்கு திடீர் மாரடைப்பு ஏற்பட்டு நேற்று வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளார்.

அவரின் உடல்நிலை கவலைக்கிடமாக இல்லை என்று வைத்தியசாலை வட்டாரத் தகவல்கள் தெரிவித்தன.

## ரமேஷ்வரன் எம்.பிக்கு கொரோனாத் தொற்று



இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸின் நிதிச் செயலாளரும் நுவரெலியா மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினருமான மருதபாண்டி ரமேஷ்வரனுக்குக் கொரோனா வைரஸ் தொற்று உறுதிப்படுத்தப்பட்டுள்ளது.

கிளங்கன் வைத்தியசாலையில் சேர்க்கப்பட்ட அவரிடம் மேற்கொள்ளப்பட்ட பி.சி.ஆர். பரிசோதனையிலேயே வைரஸ் தொற்று உறுதிப்படுத்தப்பட்டுள்ளது.

## இலங்கைக்கு ஜப்பானும் கதவடைப்பு

கொரோனா வைரஸ் பரவலைக் கட்டுப்படுத்தும் நோக்கில் இலங்கை உள்ளிட்ட வெளிநாடுகளில் இருந்து ஜப்பானுக்கு பிரவேசிக்கின்ற பயணிகளுக்கு அனுமதி வழங்குவதில்லை என அந்த நாட்டு அரசு முடிவு செய்துள்ளது.

இது தொடர்பில் அந்த நாட்டு அரசு வெளியிட்ட அறிக்கையில், இந்தியாவில் முதன் முதலில் கண்டுபிடிக்கப்பட்ட கொரோனா வைரஸின் புதிய திரிபு ஜப்பானில் பரவாமல்

2

## கோயில் திருட்டில் ஈடுபட்ட மூவர் சிக்கினர் திருட்டுப் பொருள்களும் மீட்கப்பட்டன



நெல்லியடி பொலிஸ் பிரிவுக்குட்பட்ட கரவெட்டி -குளக்கட்டு விநாயகர் கோயிலில் திருட்டில் ஈடுபட்ட மூவரை யாழ். மாவட்ட குற்றத் தடுப்புப் பிரிவினர் கைதுசெய்தனர்.

குளக்கட்டு விநாயகர் கோயிலில் கடந்த 9ஆம் திகதி திருவிழா இடம்பெறவிருந்த நிலையில் 7ஆம் திகதி இரவு குறித்த கோயிலுக்குள் உள்நுழைந்த இருவர் அங்கு மூலஸ்தானத்தில் இருந்த மந்திரத்தகடு, கோயில் பிள்ளையாரின் இரு முடிகள் மற்றும் 2 பவுண் நகைகள் உட்படப் பல பெறுமதியான பொருள்களைத் திருடிச் சென்றனர்.

குறித்த சம்பவம் தொடர்பில் நெல்லியடிப் பொலிஸாரிடம் முறையிடப்பட்டது. சம்பவம் தொடர்பில் யாழ். மாவட்ட குற்றத் தடுப்புப் பிரிவினர் விசாரணைகளை மேற்கொண்டனர்.

விசாரணைகள் மற்றும் பெறப்பட்ட தகவல்களின் அடிப்படையில் பண்டத்தரிப்பு, வடலியடைப்பு பகுதியைச் சேர்ந்த 60

2

## வளிமண்டலவியல் திணைக்களம் எச்சரிக்கை!

எதிர்வரும் 21ஆம் திகதி முதல் மறு அறிவித்தல் வரை வங்காள விரிகுடாவின் கிழக்கு கடற்பிராந்தியத்தில் கடற்றொழிலில் ஈடுபட வேண்டாம் என்று வளிமண்டலவியல் திணைக்களம் அறிவுறுத்தியுள்ளது.

வங்காள விரிகுடாவின் கிழக்கு கடற்பிராந்தியத்தை அண்மித்த பகுதியில் மே 23ஆம் திகதி தாழமுக்க நிலை மேலும் வலுவடைவதற்கான சாத்தியங்கள் காணப்படுகின்றன என்று திணைக்களம் தெரிவித்துள்ளது.

மன்னார் தொடக்கம் கொழும்பு ஊடாக காலி வரையான கடற்பிராந்தியங்களில் இடைக்கிடையே மழையுடனான வானிலை

2

## தனிமைப்படுத்தல் சட்டத்தை மீறிய மேலும் 340 பேர் கைது



தனிமைப்படுத்தல் சட்ட விதிமுறைகளை மீறிய மேலும் 340 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

முகக்கவசம் அணியத் தவறியமை மற்றும் சமூக இடைவெளியைப் பேணத் தவறியமை ஆகிய குற்றச்சாட்டுக்களின் கீழ் இவர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர்.

அத்துடன், தேசிய அடையாள அட்டை இலக்க நடைமுறைமையை மீறி, வீடுகளிலிருந்து வெளியே வந்த 99 பேரும்

2

## முழுநேரப் பயணக் கட்டுப்பாடு நாள்களில் பொருளாதார மத்திய நிலையங்கள் மூடல்

இலங்கையில் மே 21ஆம் திகதி முதல் 28ஆம் திகதி வரையில் இரண்டு கட்டங்களாக நாட்டில் முழுநேரப் பயணக்கட்டுப்பாடு விதிக்கப்படவுள்ளதன் காரணமாக நாட்டின் அனைத்து பொருளாதார மத்திய நிலையங்களையும் குறித்த காலப்பகுதியில் மூடுவதற்குத் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

இதற்கமைய 21ஆம் திகதி முதல் 24ஆம் திகதி வரையும் மூடப்படும் பொருளாதார மத்திய நிலையங்கள் 25ஆம் திகதி அதிகாலை 4 மணிக்குத் திறக்கத் திட்டமிடப்பட்டுள்ளதுடன், மீண்டும் 26 முதல் 28ஆம் திகதி வரை மூடப்படும் எனவும் அறிவிக்கப்பட்டுள்ளது.

பேலியகொட மெனிங் சந்தை உள்ளிட்ட அனைத்து பொருளாதார மையங்களும் எதிர்வரும் 21ஆம் திகதி முதல் 28ஆம் திகதி வரையான காலப்பகுதியில் இவ்வாறு செயற்படும் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதையடுத்து 25ஆம்

2

## இலங்கைக்கு ஜப்பானும் ...........

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தடுக்க இந்த முடிவு எடுக்கப்பட்டுள்ளது எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதன்படி, இலங்கை, பங்களாதேஷ் மற்றும் மாலைதீவு ஆகிய தெற்காசிய நாடுகளுக்கான கடுமையான எல்லைக் கட்டுப்பாடு நாளை மறுதினம் வெள்ளிக் கிழமை முதல் அமுலுக்கு வரவுள்ளது.

இதனிடையே ஜப்பான் அரசால் நடைமுறைக்குக் கொண்டுவரப்படவுள்ள கட்டுப்பாடுகளின்படி, அவசரகால சூழ்நிலைகளுக்கு அமைய நாட்டில் வசிக்கும் வெளிநாட்டவர்கள், பங்களாதேஷ் மற்றும் மாலைதீவுக்கு விஜயம் செய்தவர்களுக்கு அனுமதி வழங்கப்படாவிட்டால் ஜப்பான் நாட்டுக்குள் நுழைவதற்குத் தடை விதிக்கப்பட்டுள்ளது.

அதேபோல், இலங்கை, பங்களாதேஷ் மற்றும் மாலைதீவு ஆகிய நாடுகளில் இருந்து வரும் ஜப்பான் நாட்டைச் சேர்ந்தவர்களும், ஜப்பானில் வசிப்பதற்கான அனுமதி பெற்ற வெளிநாட்டவர்களும் ஜப்பான் திரும்பியவுடன் 6 நாள்கள் நியமிக்கப்பட்ட இடங்களில் கட்டாயமாகத் தனிமைப்படுத்திக்கொள்ள வேண்டும் என்றும் ஜப்பான் அரசு உத்தரவிட்டுள்ளது.

மேலும், தனிமைப்படுத்தல் காலப் பகுதியின் மூன்றாவது மற்றும் கடைசி நாளில் அவர்கள் பி.சி.ஆர். பரிசோதனை செய்யப்பட வேண்டும் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## கோயில் திருட்டில் ...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

வயதுடைய நபர் கைதுசெய்யப்பட்டார். அவரிடம் பெறப்பட்ட தகவலின்படி தாவடிப் பகுதியைச் சேர்ந்த 55 வயதுடைய நபர் கைதுசெய்யப்பட்டார்.

குறித்த திருட்டுச் சம்பவத்துக்கு உடந்தையாக இருந்த யாழ்ப்பாணம், கஸ்தூரியார் வீதியைச் சேர்ந்த 48 வயதுடைய நபர் ஒருவரும் பொலிஸாரால் கைதுசெய்யப்பட்டார்.

மூவரிடம் மேற்கொண்ட விசாரணைகளில் திருடப்பட்ட பொருள்களை விற்றுப் பெறப்பட்ட 2 லட்சத்து 30 ஆயிரம் ரூபா பணமும், உருக்கப்பட்ட நகைகளும், வெட்டப்பட்ட நிலையில் இருந்த இரு முடிகளும் பொலிஸாரால் மீட்கப்பட்டன.

## வளிமண் ...........

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

நிலவும் எனவும், காங்கேசன்துறை தொடக்கம் மன்னார் வரையிலான கடற் பிராந்தியத்தில் மணித்தியாலத்திற்கு 30 முதல் 40 கிலோமீற்றர் வரை காற்று வீசக்கூடும் எனவும் வளிமண்டலவியல் திணைக்களம் குறிப்பிட்டுள்ளது.

காலி தொடக்கம் அம்பாந்தோட்டை ஊடாக பொத்துவில் வரையான கடற் பிராந்தியங்களிலும் காங்கேசன்துறை ஊடான கடற்பிராந்தியத்திலும் காற்றின் வேகம் மணித்தியாலத்துக்கு 50 முதல் 55 கிலோமீற்றர் வேகத்தில் வீசும் எனவும் திணைக்களம் தெரிவித்துள்ளது.

## தனிமைப்படுத்தல் ...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இந்தக் காலப்பகுதியில் கைதுசெய்யப்பட்டுள்ளனர் என்றும் பொலிஸ் ஊடகப் பேச்சாளரும் பிரதிப் பொலிஸ்மா அதிபருமான அஜித் ரோஹண தெரிவித்தார்.

இதனிடையே, மாகாணங்களுக்கிடையே நுழைய முற்பட்ட 113 வாகனங்கள் தொடர்பாகச் சோதனைகள் மேற்கொள்ளப்பட்டன என்றும் அவர் குறிப்பிட்டார்.

இதேவேளை, கடந்த ஒக்டோபர் மாதம் முதல் இதுவரையான காலப்பகுதியில், தனிமைப்படுத்தல் சட்டத்தை மீறிய குற்றச்சாட்டில் 10 ஆயிரத்து 413 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர் என்றும் அவர் மேலும் தெரிவித்தார்.

## முழுநேரப் பயணக்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

திகதி பொருளாதார மையங்களுக்கு காய்கறிகளையும் பழங்களையும் கொண்டுசெல்ல அனைத்து லொறிகளுக்கும் அனுமதி வழங்க அரச முகவர்கள் மற்றும் பிரதேச செயலகங்களால் நடவடிக்கை எடுக்கப்படவுள்ளது.

இதற்கான அனுமதியை 21ஆம் திகதி, பயணக் கட்டுப்பாடுகள் விதிக்கப்படுவதற்கு முன்னர் மொத்த விற்பனையாளர்கள், சில்லறை விற்பனையாளர்கள் மற்றும் விவசாயிகள் உரிய அதிகாரிகளிடம் இருந்து பெற்றுக்கொள்ள வேண்டும் என அறிவுறுத்தப்பட்டுள்ளது.

ஒவ்வொரு பிரதேசத்திலும் உள்ள சில்லறை மற்றும் மொத்த விற்பனையாளர்களுக்கு 25ஆம் திகதி காலை 8 மணிக்குள் காய்கறிகள் மற்றும் பழங்களை விநியோகிக்கும் வகையில் பொருளாதார மையங்களால் திட்டமிடப்பட்டுள்ளது.

## மாந்தையின் புதிய...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

வாக்களிப்பின்போது 2 உறுப்பினர்கள் கலந்துகொள்ளவில்லை. மேலும், ஒரு உறுப்பினர் நடுநிலை வகித்தார். ஏனைய 19 உறுப்பினர்களும் பகிரங்க வாக்களிப்பைக் கோரினர்.

அதற்கமைய நடைபெற்ற பகிரங்க வாக்கெடுப்பில் அகில இலங்கை மக்கள் காங்கிரஸ் கட்சி சார்பாகப் போட்டியிட்ட இராமநாதன் வவுனியன் ஆதி அருணாசலம் 12 வாக்குகளையும், தமிழர் விடுதலைக் கூட்டணி கட்சி சார்பாகப் போட்டியிட்ட விக்கினராசா கயிலைநாதன் 9 வாக்குகளையும் பெற்றனர்.

அதன்படி மேலதிக 3 வாக்குகளால் அகில இலங்கை மக்கள் காங்கிரஸ் கட்சி சார்பாகப் போட்டியிட்ட இராமநாதன் வவுனியன் ஆதி அருணாசலம் வெற்றி பெற்று மாந்தை மேற்கு பிரதேச சபையின் புதிய தவிசாளராகத் தெரிவு செய்யப்பட்டார்.

புதிய தவிசாளர் தெரிவில் இராமநாதன் வவுனியன் ஆதி அருணாசலத்துக்கு ஆதரவாக அகில இலங்கை மக்கள் காங்கிரஸ் கட்சியைச் சேர்ந்த 10 உறுப்பினர்களும், ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியைச் சேர்ந்த ஓர் உறுப்பினரும், அகில இலங்கை தமிழ்க் காங்கிரஸ் கட்சியைச் சேர்ந்த ஓர் உறுப்பினருமாக 12 பேர் வாக்களித்தனர்.

## 'போர்ட் சிட்டி' .......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

கொழும்பு துறைமுக நகர பொருளாதார ஆணைக்குழுவை நிறுவும் சட்டமூலத்தை இன்று இந்தச் சபையில் சமர்ப்பிப்பதில் பெருமகிழ்ச்சியடைகின்றேன்.

இந்தப் புதிய கொழும்பு துறைமுக நகரத்தின் கட்டுமானம் கடந்த 2014 செப்ரெம்பர் மாதம் 17ஆம் திகதி, நான் ஜனாதிபதியாக இருந்த காலப்பகுதியில் ஆரம்பிக்கப்பட்டதென்று என்பதை நீங்கள் அறிவீர்கள். இந்த கட்டுமானத்திற்கு சீன மக்கள் குடியரசின் ஜனாதிபதி சீ ஜின் பிங் மற்றும் இலங்கை ஜனாதிபதியான எனது தலைமையிலேயே அடிக்கல் நாட்டப்பட்டது என்பதையும் நீங்கள் அறிவீர்கள்.

அவ்வாறாக ஆரம்பிக்கப்பட்ட இந்தப் பாரிய திட்டத்தின் மூலம் இன்று 269 ஹெக்டேயர் நிலப்பரப்பை இலங்கையுடன் இணைப்பதற்கு முடிந்துள்ளது என்பதையும் நாம் அனைவரும் அறிவோம்.

அப்புதிய நிலப்பரப்பு 2019ஆம் ஆண்டு ஒகஸ்ட் மாதம் முந்தைய அரசால் கொழும்பு மாவட்டத்துடன் இணைக்கப்பட்டதுடன், இதுவரை 'கொழும்பு துறைமுக நகரம்' என்று குறிப்பிடப்படுவதன் மூலம், இலங்கை பொருளாதாரத்திற்கு பெரும் வாய்ப்புகள் பலவற்றை பெற்றுக்கொள்ள எமக்கு ஒரு மதிப்புமிக்க வாய்ப்பு ஏற்படுத்தப்பட்டுள்ளது.

இந்தப் புதிய திட்டத்தின் முழு பலன்களையும் பெறுவதற்கு, இந்த நகர்ப்புற வளாகத்தின் மூலம் பாரிய முதலீடுகளை நாட்டினுள் ஈர்ப்பதற்குத் தேவையான சட்ட மற்றும் வணிகக் கட்டமைப்பை சரியாக நிறுவ வேண்டியது அவசியமாகும். அவ்வாறு செய்ய அரசுக்கு இப்போது ஒரு சிறப்பு பொறுப்பு உள்ளது என்பதை நாம் புரிந்துகொள்ள வேண்டும்.

அந்த கட்டமைப்பை நமக்கு சரியாக தயாரிக்க முடியுமாயின், அதனூடாக நமது நாட்டின் பொருளாதாரத்துக்கு அடுத்த ஐந்து ஆண்டுகளில் சுமார் 1,500 கோடி அமெரிக்க டொலர் முதலீட்டை பெற்றுக்கொள்ள வாய்ப்புள்ளது எனப் பொருளாதார வல்லுநர்கள் தெரிவித்துள்ளனர்.

இதேவேளை, புதிய நகர கட்டுமானப் பணிகளின் ஊடாக முதல் 5 ஆண்டுகளில் சுமார் இரண்டு லட்சம் வேலைவாய்ப்புகள் மற்றும் வாழ்வாதார வாய்ப்புகளை உருவாக்க முடியும். மேலும், முதல் ஐந்து ஆண்டுகளில் படிப்படியாக சுமார் எண்பத்து மூவாயிரம் புதிய நிரந்தர வேலைவாய்ப்புகளை உருவாக்கவும் வாய்ப்புக் கிட்டும் என பொருளாதார வல்லுநர்கள் கணித்துள்ளனர்.

உலகின் எந்த நாட்டிலும் தங்கள் முதலீடுகளை மேற்கொள்வதற்கு இன்று முதலீட்டாளர்களுக்கு வாய்ப்பு உள்ளது. இதேவேளை, அந்நிய முதலீட்டை ஈர்க்க இன்று உலகில் நிறையப் போட்டி நிலவுகின்றது. எனவே, முதலீடுகளை எதிர்பார்க்கும் நாடுகளிலிருந்து முதலீட்டாளர்களுக்குப் பெற்றுக்கொடுக்கக்கூடிய ஊக்கத்தொகை, வசதிகள் மற்றும் சேவைகள் என்பன மிக உயர் மட்டத்தில் காணப்பட வேண்டும்.

கொழும்பு துறைமுக நகரத்திலும் அவ்வாறு இடம்பெற வேண்டுமாயின், தமது செயற்பாடுகள் மற்றும் பொறுப்பை சிறப்பாகச் செய்யும் திறமையான ஆணைக்குழுவால் இந்த நகரம் நிர்வகிக்கப்பட வேண்டும்.

அத்துடன் இப்புதிய நகரத்தில் முதலீடு செய்ய முன்வரும் அனைத்து முதலீட்டாளர்களும் எவ்வித தடைகளும் இன்றி புதிய வர்த்தக நடவடிக்கைகளை முன்னெடுப்பதற்கு உகந்த வணிகச் சூழல் அமைய வேண்டும்.

இதேவேளை, இந்தத் துறைமுக நகரத்தில் உருவாக்கப்படும் வேலை வாய்ப்புகளில் குறைந்தது 75 சதவீதமாவது இலங்கையர்களுக்கு ஒதுக்கப்பட வேண்டும் என்ற திருத்தத்தை ஏற்படுத்த எதிர்பார்க்கின்றோம்.

இலங்கையர்களுக்குத் தேவையான சிறப்புத் திறன்கள் இல்லாத சில சந்தர்ப்பங்களில், இந்த நிலையை தளர்த்த ஆணைக்குழுவுக்கு இடம் கொடுக்க வேண்டும் என்று நம்புகின்றோம். அதன்படி, இதுபோன்ற விசேட சந்தர்ப்பங்களில் இந்த நிலையை தளர்த்த அவர்களுக்கு அதிகாரம் அளித்து, ஏராளமான இலங்கையர்களுக்கு வேலை வாய்ப்புகளை வழங்குவதற்காக இந்தச் சட்டத்தில் திருத்தம் செய்வதற்கு எதிர்பார்க்கின்றோம்.

இந்தப் புதிய நகரத்தை கட்டியெழுப்புவதற்கான அரசின் முயற்சிகளுக்கு, இன்றைய எதிர்க்கட்சியிலிருந்தும் கூட, நாட்டுக்கு ஒரு புதிய உத்வேகத்தை வழங்க நீங்கள் தொடர்ந்து ஆதரவளிப்பீர்கள் என்று நாங்கள் நம்புகின்றோம். நீங்கள் அனைவரும் அவ்வாறு செய்தால், அதுவே சர்வதேச சமூகத்துக்கு நாங்கள் அனுப்பும் சிறந்த செய்தியாகும். அத்தகைய செய்தியின் மூலம் நம் நாட்டுக்குள் ஈர்க்கப்படும் முதலீட்டின் அளவு வேகமாக அதிகரிக்கும் என்று நாம் உறுதியாகக் கூறலாம். அப்போது இந்தத் திட்டத்தின் வெற்றியை நாம் அனைவரும் கட்சி பேதமின்றி அனுபவிக்க முடியும்.

எமது நாட்டை நேசிக்கும், நாட்டின் எதிர்காலப் பயணத்தை ஆசீர்வதிக்கும் அனைத்து உறுப்பினர்களையும் கட்சி பேதமின்றி இந்தச் சட்டமூலத்துக்கு ஆதரவு வழங்குமாறு அழைப்பு விடுக்கின்றேன் - என்றார்.



# நமது பார்வை

உண்மை - நேர்மை - பக்கம் சாராமை
ஆசிரியபீடம்: 30, கல்லூரி வீதி, யாழ்ப்பாணம் மின்னஞ்சல் - kalaikkathirnews@gmail.com
தொலைபேசி - 021 222 3000 இணையம் - onlinekathir.com

## மஹிந்தரின் சுயதம்பட்டம்

முள்ளிவாய்க்கால் நினைவேந்தல் வேளையில் காலாகாலமாகத் தாம் கட்டவிழ்த்துவிடும் தமது அளப்பை இந்த முறையும் அவிழ்த்து விடுவதற்குத் தவறவில்லை பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ.

தமிழர்களைப் பொறுத்தவரை வரலாற்றில் அவர்களின் ஆன்மாவில் மாறாத வடுவை – பெருங்காயத்தை – ரணகளமாக ஏற்படுத்தியது முள்ளிவாய்க்கால் பேரவலம். வார்த்தைகளில் வர்ணிக்க முடியாத சொல்லொணாத் துன்ப துயரங்களை – பேரழிவுகளை – பெரும் சாவுகளை –ஏற்படுத்திய வரலாற்றுக் கொடூரம், பௌத்த, சிங்களப் பேரினவாத வெறியின் வக்கிரமாக உக்கிரத்துடன் அரங்கேறிய பெருந்துயரின் அடையாளம் முள்ளிவாய்க்கால்.

பௌத்த, சிங்களப் பேரினவாத வெறி, மேலாண்மைத் திமிர் கொப்பளித்த அந்தக் கொடூர காலத்தில் சிங்களத்தின் தலைவர் மஹிந்த ராஜபக்ஷதான்.

அதனால் அந்த வரலாற்றுக் கொடூரத்தை மூடி மறைக்கும் – மறக்கச் செய்யும் – ஒளிக்க வைக்கும் – பிரசாரத்தை முன்னெடுக்க வேண்டிய முதல் கடப்பாடும் பொறுப்பும் அவரைச் சார்ந்தது.

அதனால்தான் வருடம் தோறும் இந்நிகழ்வு காலத்தில் அவரும் அவரைச் சூழவிருப்போரும் வழமைபோல தமது 'கோயபலஸ்' பிரசாரத்தை தொடங்கி விடுவர். இந்த வருடமும் அதற்கு விதிவிலக்கல்ல.

அந்த வரிசையில்தான் இம்முறையும் 'மக்களைப் பாதுகாக்கவே புலிகளுடன் போரிட்டோம்' என்ற பழைய கீறல் விழுந்த 'ரெக்கோட்டை' திரும்ப ஒலிக்க விடும் உரையை பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ நாடாளுமன்றத்தில் நேற்று, மே 18 ஆம் திகதி முள்ளிவாய்க்கால் தினத்தன்று நிகழ்த்தியிருக்கின்றார்.

இப்பத்தியில் ஒரு விடயத்தை நாம் அடிக்கடி சுட்டிக்காட்டுவதுண்டு. அது – 'கணக்குப்பிள்ளை பேசக் கூடாது; கணக்குப் புத்தகம் பேச வேண்டும்" என்பது.

மஹிந்த ராஜபக்ஷ தலைமையிலான அரசு எடுத்த – தொடுத்த – கொடூர யுத்தம் பொது மக்களைப் பாதுகாப்பதற்கானதா, தமிழர்களை அழிப்பதற்கானதா என்பதனை இதனுடன் தொடர்புடைய தகுந்த – நடுநிலையான – நீதியான – தரப்புகளே எடைபோட்டுக் கூற வேண்டும். அரசுத் தலைவராக இருந்தவர் தங்களுக்குத் தாங்களே சுயதம்பட்டம் அடித்து – சுயசான்றிதழ் – கொடுத்து ஆலாபரணம் பண்ணுவதில் அர்த்தமில்லை.

மஹிந்த ராஜபக்ஷ தலைமையிலான அரசு மட்டுமல்ல, அதற்கு முந்திய சந்திரிகாவின் அரசில் இருந்து (2002 இல் இருந்து 2011 வரை) இலங்கையில் அரங்கேறிய மனித உரிமை மீறல்கள் மற்றும் விடயங்களை ஐ.நா. மனித உரிமைகள் ஆணையாளரின் இலங்கைக்கான ஆய்வகம் ஆராய்ந்து சுயாதீனமான – சுதந்திரமான – விசாரணை அறிக்கை ஒன்றை முன்வைத்திருக்கின்றது.

அதன்படி –

இலங்கையில் யுத்தத்தின் இறுதிக் கட்டத்தில் தாராளமாக யுத்தக் குற்றங்கள் நிகழ்ந்திருக்கின்றன. மோசமான மனித உரிமை மீறல்கள் இடம்பெற்றிருக்கின்றன. மனிதாபிமானத்துக்கு எதிரான கொடூரங்கள் தாராளமாக அரங்கேறியிருக்கின்றன.

ஐ.நா. செயலாளர் நாயகத்தினால் நியமிக்கப்பட்ட நிபுணர் குழுவின் (தருஸ்மன் குழுவின்) அறிக்கையும் இந்த விடயங்களை விவரித்துள்ளது.

இந்த அறிக்கைகளில் கூறப்பட்டமையின் பிரகாரம் யுத்தத்தின் இறுதிக் கட்டத்தில் நடந்த விடயங்கள் குறித்து சர்வதேச முறைமைகளுக்கு அமைவாக, நீதி நியாயமான விசாரணைகள் நடத்தப்பட்டு, உண்மைகள் கண்டறியப்பட்டு, குற்றமிழைத்தோர் சட்டத்தின் முன் நிறுத்தப்பட்டு, பொறுப்புக் கூறல் நிலைநாட்டப்பட்டால் மட்டுமே நிஜ விடயங்கள் அம்பலமாகும்.

அப்போதுதான் மஹிந்த – கோட்டா அணியின், ராஜபக்ஷக்கள் தார்பாரின், உண்மைச் சொரூபம் – கோரமுகம் – அம்பலமாகும்.

மனித குலத்துக்கு எதிரான பெருங்கொடூரம், யுத்தத்தின் இறுதிக் கட்டத்தில் பெரும் எடுப்பில் முன்னெடுக்கப்பட்டது என்பதை ஐ.நாவே அம்பலப்படுத்திய பின்னரும் மக்களைப் பாதுகாக்கவே புலிகளுடன் போரிட்டோம் என்று இன்னும் – இன்றும் – கதை அளக்கின்றார் மஹிந்தர்.

உண்மைகளை அம்பலப்படுத்தக் கூடிய – சர்வதேச நியமங்களுக்கு அமைவான – நீதி விசாரணைகளுக்கு முட்டுக்கட்டை போட்டு, தடை விதித்துக் கொண்டு –

தம் படையினர் புரிந்த மனிதப் பேரவலக் குற்றங்கள், யுத்தக் குற்றங்கள், மனித உரிமை மீறல்களை மூடி மறைத்துக் கொண்டு –

முழுப் பூசணிக்காயை சோற்றில் மறைப்பது போல திரும்பவும் ஒரு தடவை சுயதம்பட்ட உரை நிகழ்த்தியிருக்கின்றார் மஹிந்தர்.

மஹிந்தர் – கோட்டா அணியின் படைகள் நடத்தியது மக்களை மீட்பதற்கான மனிதாபிமானப் போர் அல்ல, தமிழின அழிப்புக் கொடூரமே என்பதை காலம் பிந்தினாலும் வரலாறு ஒரு நாள் மிக வெளிப்படையாகவும் பகிரங்கமாகவும் நிரூபித்து அம்பலப்படுத்தும் என்பது நிச்சயம். அத்துணை கோரம் – அகோரம் – அதற்குள் புதைந்து கிடக்கின்றது.

# துறைமுக நகரத் திட்டத்திலும் தமிழ்மொழி புறக்கணிக்கப்பட்டது

## செந்தில் தொண்டமான் வேதனை



கொழும்புத் துறைமுக நகரத் திட்டம் உட்பட சீன நிறுவனங்களால் இலங்கையில் முன்னெடுக்கப்பட்டு வரும் வேலைத்திட்டங்களின் போது பொருத்தப்படும் பெயர்ப் பலகைகளில், தமிழ் மொழி தொடர்ந்தும் புறக்கணிக்கப்பட்டு வருவதாக, பெருந்தோட்டங்களுக்கான பிரதமரின் ஒருங்கிணைப்புச் செயலாளரும் இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸின் உப தலைவருமான செந்தில் தொண்டமான் சுட்டிக்காட்டினார்.

பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ தலைமையில், அலரி மாளிகையில் நடைபெற்ற ஆளும் கட்சிக் கூட்டத்தில் இலங்கை தொழிலாளர் காங்கிரஸ் சார்பாக இலங்கை தொழிலாளர் காங்கிரஸின் பொதுச் செயலாளரும், இராஜாங்க அமைச்சருமான ஜீவன் தொண்டமான், பெருந்தோட்டங்களுக்கான பிரதமரின் ஒருங்கிணைப்புச் செயலாளரும் இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸின் உப தலைவருமான செந்தில் தொண்டமான் ஆகியோர் கலந்துகொண்டனர்.

இந்தக் கூட்டத்தின் போதே, செந்தில் தொண்டமான் இந்த விடயத்தைச் சுட்டிக்காட்டினார்.

இந்தக் கூட்டத்தின் போது –

கொழும்புத் துறைமுக நகரத் திட்டம் தொடர்பான பேச்சு எழுந்தபோது உரையாற்றிய செந்தில் தொண்டமான், துறைமுக நகரத் திட்டம் ஆரம்பிக்கப்பட்ட நாள் முதல் தான் அவதானித்த விடயமாகவே, இந்தத் தமிழ் மொழிப் புறக்கணிப்பு இடம்பெற்று வருவதாகவும் சீன நிறுவனங்களின் வேலைத்திட்டங்களின் போது, விசேடமாக கொழும்புத் துறைமுக நகரத் திட்டத்தின் போது பொருத்தப்படும் பெயர்ப் பலகைகளில், இலங்கையின் உத்தியோகபூர்வ மொழியான தமிழ் மொழி புறக்கணிக்கப்படுவதைத் தாம் ஒருபோதும் ஏற்றுக்கொள்ள முடியாதென்றும் எடுத்துரைத்தார்.

அத்துடன், நாட்டில் மும்மொழிக் கொள்கையொன்று நடைமுறையில் உள்ள நிலையில், அவற்றுக்கு மரியாதை செலுத்தி, அம்மூன்று மொழிகளையும் பயன்படுத்த உத்தரவிடுமாறும், பிரதமரிடம் செந்தில் தொண்டமான் வலியுறுத்தினார். இது தொடர்பில் கருத்துரைத்த இராஜாங்க அமைச்சர் அஜித் நிவாட் கப்ரால், இது தொடர்பில் உடன் அவதானம் செலுத்தி, மும்மொழிக் கொள்கையைக் கடைப்பிடிக்குமாறு, உரிய தரப்பினருக்கு வலியுறுத்துவதாக உறுதியளித்துள்ளார்.

# கத்திக்குத்துக்கு இலக்காகி முல்லையில் இளைஞர் சாவு



முல்லைத்தீவு, மே 20

முல்லைத்தீவு மாவட்டத்தின் புதுக்குடியிருப்பு பொலிஸ் பிரிவுக்குட்பட்ட சுதந்திரபுரம் பகுதியில் கத்திக்குத்துக்கு இலக்கான 25 வயதுடைய இளைஞர் ஒருவர் உயிரிழந்துள்ளார்.

கடந்த திங்கட்கிழமை இரவு கத்திக்குத்துக்கு இலக்கான நிலையில் புதுக்குடியிருப்பு வைத்தியசாலைக்கு கொண்டுவரப்பட்ட நிலையில் அவர் உயிரிழந்துள்ளார்.

இதன்பின்னர் சடலம் வைத்தியசாலை பிரேத அறையில் வைக்கப்பட்ட நிலையில் நேற்று (செவ்வாய்க்கிழமை) முல்லைத்தீவு மாவட்ட நீதிபதி ரி.சரவணராஜா புதுக்குடியிருப்பு வைத்தியசாலையில் சடலத்தை பார்வையிட்டு சம்பவம் இடம்பெற்ற இடத்தையும் பார்வையிட்ட பின்னர் குறித்த நபருக்கு பி.சி.ஆர். பரிசோதனைகளை மேற்கொண்டு, பெறுபேறுகள் அடிப்படையில் நடவடிக்கைகள் மேற்கொள்ள பொலிஸாருக்கு உத்தரவிட்டுள்ளார்.

இதன்படி பி.சி.ஆர். பரிசோதனைகளில் கொரோனாத் தொற்று இல்லையெனில் சடலம் பிரேத பரிசோதனையின் பின்னர் உறவுகளிடம் ஒப்படைக்கப்படும், தொற்று இனம் காணப்பட்டால் உரிய கொரோனா நடைமுறைக்கமைய தகனம் செய்யப்படும் என பொலிஸார் தெரிவித்தனர்.

சம்பவத்தில் உயிரிழந்தவர் சுதந்திரபுரம் கொலனி பகுதியைச் சேந்த 25 வயதுடைய குணராசா நிதர்சன் என்பவராவார்.

சம்பவம் தொடர்பில் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டுவரும் புதுக்குடியிருப்பு பொலிஸார், கத்திக்குத்தை மேற்கொண்ட நபர் தலைமறைவாகியுள்ள நிலையில் அவரை கைது செய்ய நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளனர்.

# பேலியகொடை மீன்சந்தை இனி மூடப்பட மாட்டாதாம்

பேலியகொட மீன்சந்தையை எக் காரணிகளுக்காகவும் மூடாமல் இருக்க தீர்மானிக்கப்பட்டுள்ளது.

சுகாதார பாதுகாப்பு அறிவுறுத்தல்களை கடுமையான முறையில் செயற்படுத்தி மீன் சந்தையின் நடவடிக்கைகளை தொடர்ச்சியாக முன்னெடுத்துச் செல்ல ஆலோசனைகள் வழங்கப்பட்டுள்ளன என மீன்பிடி இராஜாங்க அமைச்சர் காஞ்சன விஜேசேகர தெரிவித்தார்.

மீன்பிடி அமைச்சில் அமைச்சின் அதிகாரிகளுடன் இடம்பெற்ற கலந்துரையாடலிலேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் குறிப்பிடுகையில் –

கொவிட் தொற்றால் எதிர்காலத்தில் எவ்வாறான நிலை ஏற்பட்டாலும் மீன்பிடித் துறையை உரியமுறையில் முன்னெடுத்துச் செல்வதற்கான தயார்படுத்தல்களை மேற்கொள்ளுமாறு, அமைச்சின் அதிகாரிகள், இதற்கு இணையான நிறுவனங்களின் பிரதானிகளுக்கு ஆலோசனை வழங்கப்பட்டுள்ளது.

துறைமுக சேவைகளையும் தடையின்றி முன்னெடுத்துச் செல்வதற்கான நடவடிக்கைகளை விரைவாக செயற்படுத்த இலங்கை மீன்பிடி துறைமுக கூட்டுத் தாபனத்துக்கு ஆலோசனைகள் வழங்கப்பட்டுள்ளன.

அத்துடன் சகல அத்தியாவசிய சேவைகள் மற்றும் மொத்த மீன் விநியோகத்துக்கு தேவையான வாகன அனுமதிப்பத்திரங்களை விரைவாக வழங்கவும் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

மேலும், பிடிக்கப்படும் மீன்களை வீணடிக்காமல் கொள்வனவு செய்வதற்கு, இலங்கை மீன்பிடி கூட்டுத்தாபனத்துக்கு ஆலோசனை வழங்கப்பட்டுள்ளதுடன், 22 மீன்பிடித் துறைமுகங்கள் ஊடாக மீன்களை கொள்வனவு செய்யவும் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

முடக்கப்பட்டுள்ள பகுதிகளிலுள்ள மக்களுக்கு மீன்களை இலகுவாக கொள்வனவு செய்ய மீன்பிடி கூட்டுதாபனத்துக்குரிய நடமாடும் சேவையை வலுப்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. – என்றார்.

# பிரதமருடனான கூட்டத்தில் கொரோனா தடுப்பில் தமிழக அரசின் செயற்பாடுகள் குறித்து எடுத்துரைப்பு

இந்தியா முழுவதும் கொரோனா பரவல் அதிகரித்து வரும் நிலையில் பிரதமர் மோடி தலைமையில், காணொலிக் காட்சி வாயிலாக மாநில முதலமைச்சர்களுடன் கொரோனா வைரஸ் தடுப்பு நடவடிக்கைகள் தொடர்பாக கலந்தாய்வுக் கூட்டம் நேற்று நடைபெற்றது.

இந்தக் கூட்டத்தில் தமிழக முதல்வர் மு.க.ஸ்டாலின், மருத்துவம் மற்றும் மக்கள் நலவாழ்வுத் துறை அமைச்சர் மா.சுப்பிரமணியன், தலைமைச் செயலாளர் இறையன்பு, மக்கள் நலவாழ்வுத்துறை முதன்மைச் செயலாளர் இராதாகிருஷ்ணன், சென்னை மாநகராட்சி ஆணையர் ககன்தீப் சிங் பேடி ஆகியோரோடு அரசு உயரதிகாரிகளும் கலந்து கொண்டனர்.

தமிழகத்தில் எடுக்கப்பட்டு வரும் கொரோனா தடுப்பு நடவடிக்கைகள் குறித்து பிரதமர் மோடியிடம் முதல்வர் மு.க.ஸ்டாலின் விரிவாக எடுத்துக்கூறினார். அப்போது, 'வீட்டுத் தனிமையில் இருப்பவர்களுடன் மருத்துவர்கள் தினந்தோறும் உரையாடி மருத்துவ ஆலோசனை வழங்கி வருகிறார்கள். மாற்றுத்திறனாளிகளின் வீடுகளுக்கு நேரடியாகச் சென்று தடுப்பூசியை செலுத்த வுள்ளோம். அம்புலன்ஸ் திட்டங்கள் சிறப்பாக செயற்பட்டு வருகின்றன' என்று முதல்வர் குறிப்பிட்டுள்ளார்.

இதற்கு பிரதமர் மோடி, 'சென்னையைப் போலவே மற்ற மாநகரங்களிலும் இந்த நடைமுறைகளைப் பின்பற்றலாம். தமிழக அரசின் செயற்பாடு மிகவும் மகிழ்ச்சியாக இருக்கிறது' என்று பாராட்டுத் தெரிவித்துள்ளார்.




## கொரோனாத் தடுப்பு பணிகளுக்காக ஒரு மாத ஊதியத்தை வழங்கிய வைகோ



தமிழக அரசு மேற்கொண்டு வருகிற கொரோனாத் தடுப்புப் பணிகளுக்காக முதல்வர் மு.க.ஸ்டாலினுடைய வேண்டுகோளை ஏற்று, ம.தி.மு.க. பொதுச்செயலாளர் வைகோ தமது நாடாளுமன்ற உறுப்பினர் பொறுப்பிற்கான ஒரு மாத ஊதியத்துடன் மேலும் ஒரு தொகை சேர்த்து இரண்டு லட்ச ரூபாவை வழங்கியுள்ளார். அதற்கான காசோலை முதல்வரின் செயலர் உமாநாத்தின் அலுவலகத்தில் ஒப்படைக்கப்பட்டுள்ளது.

இதேபோல், ம.தி.மு.க. சட்டமன்ற உறுப்பினர்களும் தங்களது ஒரு மாத ஊதியத்தை கொரோனாத் தடுப்புப் பணிகளுக்கு வழங்குவர் என்று ம.தி.மு.க. தலைமை அலுவலகம் வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## பேரறிவாளனுக்கு நீண்ட விடுப்பு வழங்க முதலமைச்சரிடம் அற்புதம்மாள் கோரிக்கை





ராஜீவ் காந்தி கொலை வழக்கில் சிறையில் உள்ள தன்னுடைய மகன் பேரறிவாளனுக்கு நீண்ட விடுப்பு வழங்க நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று முதலமைச்சரிடம் அவருடைய தாயார் அற்புதம்மாள் கோரிக்கை விடுத்துள்ளார்.

இந்திய முன்னாள் பிரதமர் ராஜீவ் காந்தி கொலை வழக்கில் ஆயுள் தண்டனைக் கைதியாக சென்னை மத்திய சிறையில் அடைக்கப்பட்டுள்ள பேரறிவாளன், உடல்நலக் குறைவால் பாதிக்கப்பட்டுள்ளார். அவரது உடல் நிலையைக் கருத்தில் கொண்டு அவருக்கு உயர்நீதிமன்றமும் உச்ச நீதிமன்றமும் பரோல் வழங்கியுள்ளன.

பேரறிவாளனுக்கு விடுதலை கோரும் மனு உச்ச நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்டுள்ளது. இந்நிலையில், இந்தியா முழுவதும் முடக்கத்தை ஏற்படுத்திய பெருந்தொற்றால் சிறைக்கைதிகள் பாதிக்கப்படாமல் இருப்பதற்கு தேவைப்படின் பரோல் வழங்கவும் கோரிக்கைகள் வலுத்து வருகின்றன.

இந்த நிலையில், நீண்ட நாள்களாக சிறையில் இருக்கும் பேரறிவாளன் நீரிழிவு மற்றும் சிறுநீரக நோய்த்தொற்றால் பாதிக்கப்பட்டுள்ளனர் எனவும், தொற்று எளிதில் பரவும் அபாயமும் அப்படித் தொற்று ஏற்பட் டால் உயிருக்கே ஆபத்து ஏற்படும் அபாயமும் உள் ளதால், கொரோனா பரவலைக் கருத்தில் கொண்டு அவருக்கு நீண்ட விடுப்பு வழங்கிட வேண்டும் என அவரது தாயார் அற்புதம்மாள் முதலமைச்சர் மு.க.ஸ்டாலினிடம் கோரிக்கை முன்வைத்துள்ளார்.

'சிறைகளில் பரவி வரும் கொரோனாக் கிருமித் தொற்றும், மரணங்களும் மிகுந்த அச்சத்தைத் தருகின்றன. ஏற்கெனவே பல்வேறு நோய்களால் பாதிக்கப்பட்டுள்ளமையால் அறிவுக்குத் (பேரறிவாளன்) தொற்று ஏற்படும் ஆபத்து உண்டு என சிறைத்துறை மருத் தவர்கள் அறிக்கை தந்துள்ளனர்.

மேலும்,அறிவுக்குத்தடைப்பட்டுள்ளமருத்துவத்தையும் தொடர வேண்டியுள்ளது. இதனைக் குறிப்பிட்டு நீண்ட விடுப்பு வழங்கக் கோரி கடந்த 10 ஆம் திகதி மனு அனுப்பியுள்ளேன். 90 நாள்கள் விடுப்பு வழங்கலாமென உச்ச நீதிமன்றம் குறிப்பிட்டுள்ளது. எனவே, முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் எனது கோரிக்கையை கனிவுடன் பரிசீலித்து விரைந்து நடவடிக்கை எடுக்க கேட்டுக் கொள்கிறேன்' என்று அற்புதம்மாள் கோரிக்கை விடுத்துள்ளார்.

## மருத்துவமனையில் விஜயகாந் அனுமதி

தே.மு.தி.க. தலைவர் விஜயகாந்த் இன்று அதிகாலை சென்னை மணப்பாக்கத்தில் உள்ள மியாட் மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டார். மூச்சுத் திணறல் காரணமாக விஜயகாந்த் மருத்துவமனையில் சேர்க்கப்பட்டார் என செய்திகள் வெளியாகியிருந்தன. அவரது உடல் நிலை குறித்து பலவிதமான ஊகங்களும் சமூக வலைத்தளங்களில் பகிரப்பட்டன.



இந்த நிலையில், விஜயகாந்த்தின் உடல்நிலை சீராக உள்ளது என்று மருத்துவமனை நிர்வாகம் கூறியுள்ளதாகவும் சிகிச்சை முடிந்து ஓரிரு நாள்களில் விஜயகாந்த் வீடு திரும்புவார் என்றும் வதந்திகளை நம்பவோ பரப்பவோ வேண்டாம் எனவும் தே.மு.தி.க. வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

## மீரட்டில் 24 வயதான இரட்டையர்கள் ஒரே நாளில் கொரோனாவுக்குப் பலி

இந்தியாவின் உத்தரப்பிரதேச மாநிலம் மீரட் பகுதியைச் சேர்ந்த 24 வயதாகும் இரட்டைச் சகோதரர்கள் ஒரே நாளில் கொரோனாவுக்குப் பலியான துயர சம்பவம் இடம்பெற்றுள்ளது.

மீரட்டைச் சேர்ந்த ரேமண்ட் ரபேல், சோஜா தம்பதிகள் மகன்களான ஜோபிரட், ரால்பிரட் ஆகிய இருவருமே கொரோனாவால் ஒரே நாளில் உயிரிழந்தவர்களாவர்.

கடந்த ஏப்ரல் 23 ஆம் திகதி இரட்டையர்கள் இருவருக்கும் கொரோனாத் தொற்று ஏற்பட்டது. இருவரும் ஒரே மருத்துவமனையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டனர். இந்நிலையில் கடந்த மே 13 ஆம் திகதி இருவரும் ஒருவர் பின் ஒருவராக உயிரிழந்தனர்.

13 ஆம் திகதி முதலில் ஜோபிரட் சிகிச்சை பலனின்றி உயிரிழந்தார். அவர் இறந்து சில மணி நேரத்திலேயே ரால்பிரட் மரணமானார்.

3 நிமிடங்கள் வித்தியாசத்தில் அடுத்தடுத்து பிறந்தவர்கள் இவர்கள். இருவரும் ஒரே மாதிரியான உடை, ஒரே பாடசாலை, ஒரே கல்லூரி என வாழ்க்கையில் ஒன்றாய் வாழ்ந்தனர்.

ஒன்றாகப் பொறியியல் படித்த இரட்டையர்கள் ஐதராபாத்தில் முன்னணி நிறுவனங்களில் இணைந்து பணியாற்றி வந்தனர். கொரோனாத் தொற்று நோய் தீவிரமடைந்தமை அடுத்து இருவரும் சொந்த ஊருக்கு வந்து வீட்டிலிருந்தே அலுவலக வேலைகளை செய்து வந்தனர்.

இந்நிலையிலேயே கொரோனாத் தொற்றுக்குள்ளாகி பாதிக்கப்பட்ட இருவரும் ஒரே நாளில் அடுத்தடுத்து உயிரிழந்த துயரச் சம்பவம் இடம்பெற்றுள்ளது.

இதேவேளை, கொரோனாத் தொற்றுக்குள்ளான இரட்டையர்களுக்கு 10 ஆம் திகதி எடுக்கப்பட்ட சோதனையில் அவர்கள் தொற்றிலிருந்து குணமடைந்துவிட்டனர் என தமக்கு அறிவிக்கப்பட்டது என பெற்றோர் தெரிவித்துள்ளனர்.

இருவரும் விரைவில் வீட்டுக்கு வருவார்கள் என தாங்கள் எதிர்பார்த்திருந்த நேரத்திலேயே இருவரும் அடுத்தடுத்து உயிரிழந்த அதிர்ச்சிச் செய்தி தங்களுக்கு அறிவிக்கப்பட்டதாகவும் அவர்கள் கண்ணீருடன் கூறியுள்ளனர்.

## டெல்லியில் கொரோனாவால் உயிரிழந்தவர்களின் குடும்பங்களுக்கு அரசு நிவாரணம் வழங்கப்படும்

### முதல்வர் அரவிந்த் கெஜ்ரிவால் அறிவிப்பு

டெல்லியில் கடந்த சில நாள்களாக கொரோனாத் தொற்றுப் பாதிப்பு குறையத்தொடங்கியுள்ளதாக தரவுகள் வெளியாகியுள்ளன. தொற்றுப் பரவலைக் கட்டுப்படுத்தும் நோக்கில் டெல்லியில் மே 24 ஆம் திகதி வரை ஊரடங்கு அமுல்படுத்தப்பட்டுள்ளது. இதன் பலனாக உச்சத்தில் இருந்து வந்த கொரோனா தற்போது குறைந்து வருவதாகத் தெரிவிக்கப்படுகிறது.

டெல்லியில் கொரோனா பாதிப்பால் இதுவரை உயிரிழந்தவர்களின் எண்ணிக்கை 22,111 ஆக உள்ளது. தற்போது 50,863 பேர் கொரோனாவிற்கு சிகிச்சை பெற்று வருகின்றார் என டெல்லி சுகாதாரத்துறை தெரிவித்துள்ளது.

இந்த நிலையில், டெல்லியில் கொரோனாத் தொற்றால் உயிரிழந்தவர்களின் குடும்பத்தினருக்கு ஐம்பதாயிரம் ரூபா நிவாரணம் வழங்கப்படும் என முதலமைச்சர் அரவிந்த் கெஜ்ரிவால் அறிவித்துள்ளார்.

பெற்றோரில் தாய் அல்லது தந்தை கொரோனாத் தொற்றால் உயிரிழந்திருந்தாலும் வீட்டிலிருக்கும் குழந்தை 25 வயது அடையும் வரை 2,500 ரூபா மாதாந்தம் வழங்கப்படும் ஆதரவற்ற நிலையில் இருக்கும் அந்தக் குழந்தையின் கல்விக்கான முழுச் செலவையும் டெல்லி அரசு பொறுப்பேற்றுக் கொள்ளும்.

குடும்பத்தில் வருமானம் ஈட்டுபவர் அல்லது குடும்பத் தலைவர் கொரோனாத் தொற்றால் உயிரிழந்திருந்தால் அந்தக் குடும்பத்துக்கும் மாதம் 2,500 ரூபா வழங்கப்படும். கொரோனாவால் உயிரிழந்தமைக்காக தனியாக ஐம்பதாயிரம் ரூபா வழங்கப்படும்.

இந்த அறிவிப்புகள் அனைத்தும் டெல்லி அரசின் அமைச்சரவை ஒப்புதலைப் பெற்றபின் நடைமுறைப்படுத்தப்படும் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

# காஸா பகுதியில் விடிய விடிய இஸ்ரேல் விமானக் குண்டு வீச்சு



பலஸ்தீனத்தின் காஸா பகுதியில் இஸ்ரேல் விடிய விடிய தாக்குதல் நடத்தியது.

அல் அக்ஸா மசூதி பிரச்சினை தொடர்பாக எழுந்த பிரச்சினையைத் தொடர்ந்து இஸ்ரேல் இராணுவத் திற்கும், பலஸ்தீன ஹமாஸ் போராளிகளுக் கும் இடையே கடும் மோதல் நடந்து வருகிறது.

இரு வாரங்களாக நடந்து வரும் தாக்குதலில் பலஸ்தீனத்தில் 63 குழந் தைகள் உள்பட 217 பேர் உயிரிழந்துள்ள னர் எனவும், ஆயிரத்து 500 இற்கும் மேற் பட்டவர்கள் காயமடைந்துள்ளனர் எனவும் ஹமாஸ் சுகாதாரத்துறை தெரிவித்துள்ளது.

ஐ.நா. உள்ளிட்ட பல்வேறு நாடுகள் போரை நிறுத்துமாறு கூறியும் இஸ்ரேல் தொடர்ந்து தாக்குதல் நடத்தி வருகிறது. நேற்று இரவு முழுவதும் விடிய விடிய இஸ்ரேலிய விமானங்களும், தரைப் படையினரும் தாக்குதல் நடத்தினர்.

தொடரும் தாக்குதல்களைக் கண்டித்து ரமல்லா, ஹெப்ரான் உள்ளிட்ட நகரங்களில் பாலஸ்தீன மக் கள் போராட்டம் நடத்தினர்.

# உலக பணக்காரர்கள் பட்டியல் பெர்னார்ட் அர்னால்ட் முன்னிலை





உலக பணக்காரர்களில் இரண்டாவது இடத்தில் இருந்த டெஸ்லா நிறுவனத்தின் நிறுவனர் எலான் மஸ்க்கை பெர்னார்ட் அர்னால்ட் பின்னுக்கு தள்ளியுள்ளார்.

கடந்த மார்ச் மாதம் ப்ளூம்பெர்கின் பணக்காரர்கள் பட்டியலில் இரண்டாம் இடத்திலிருந்த எலான் மஸ்க், தற்போது 16,060 கோடி டொலர் சொத்துக்களைக் கொண்டுள்ளார்.

இது கடந்த ஜனவரி மாதத்தில் அவரிடமிருந்த சொத் துக்களிலிருந்து 24% குறைவாகும்.

மின்சார வாகன தயாரிப்புகளின் பங்குகள் 2.2% சரிந்ததுடன், டெஸ்லா நிறுவனம் பிட்காயின் பேமண்ட் முறையை நிறுத்துவதாக எலான் மஸ்க் கடந்தவாரம் அறிவித்ததையடுத்து டெஸ்லா நிறுவனத்தின் பங்குகள் சரிய தொடங்கின.

இதுவே எலான் மஸ்க் பணக்காரர்கள் பட்டியலில் பின் தங்கியதற்கு காரணம் என சொல்லப்படுகிறது.

# புதிய வகை வைரஸ் எமது நாட்டில் இல்லை

## சிங்கப்பூர் அரசு தகவல்

மிகவும் ஆபத்தான மரபணு மாற்ற வைரஸ் சிங்கப்பூரில் பரவுகிறது என்ற டெல்லி முதல மைச்சர் கெஜ்ரிவால் கூறியதை அந்நாட்டு அரசு மறுத்துள்ளது.

இப்படி ஒரு வைரஸ் சிங்கப்பூரில் பரவுவதாகவும், அதன் மூலம் இந்தியாவில் கொரோனா 3 ஆம் அலை உருவாகும் எனவும் கெஜ்ரிவால் டுவிட் செய்தி ருந்தார்.

இதை மறுத்துள்ள சிங்கப்பூர் சுகாதார அமைச் சகம், சிங்கப்பூர் மரபணு மாற்ற வைரஸ் என்று எதுவும் இல்லை என்றும், தற்போது சிங்கப்பூரில் காணப்படுவது இந்தியாவில்ன் காணப்பட்ட ய.1.617.2 வைரஸ் மட்டுமே என்றும் தெரிவித்துள்ளது.

# மடகஸ்கார் நாட்டில் 10 லட்சத்துக்கும் மேற்பட்ட மக்கள் பட்டினியால் அவதி

ஆப்பிரிக்க நாடான மடகஸ்காரில் 10 லட்சத்துக் கும் மேற்பட்ட மக்கள் பட்டினியால் வாடுகின்றனர்.

தெற்கு மடகஸ்காரில் கடும் வறட்சி மற்றும் பஞ்சத்தால் ஐந்து வயதிற்குட்பட்ட குழந்தைகள் ஊட்டச்சத்து குறைபாட்டால் கடுமையாக பாதிக் கப்பட்டுள்ளன எனவும், ஊட்டச்சத்து குறைபாடு கடந்த, மார்ச் முதல் இரு மடங்காக அதிகரித் துள்ளதாகவும் ஐ.நாவின் உலக உணவு திட்ட அமைப்பு தெரிவித்துள்ளது.

பாதிக்கப்பட்ட குழந்தைகளுக்கு அவசரகால உணவு மற்றும் ஊட்டச்சத்து தேவையை பூர்த்தி செய்ய தங்களுக்கு நன்கொடை தேவை என உலக உணவு திட்ட அமைப்பு கோரிக்கை விடுத் துள்ளது.



# உலக நாடுகளுக்கு 8 கோடி கொரோனாத் தடுப்பூசிகளை பகிர்ந்தளிக்கும் அமெரிக்காவின் முடிவுக்கு சீனா வரவேற்பு

கொரோனாவைரஸுக்கு எதிரான போரில் உலக நாடு களுக்கு உதவும் வகையில் தங்கள் வசம் உள்ள 8 கோடி கொரோனாத் தடுப்பூசி களை உலக நாடுகளுக்கு பகிர்ந்தளிக்க உள்ளோம் என அமெரிக்க ஜனாதிபதி ஜோ பைடன் அறிவித்தார். அடுத்த 6 மாதங் களுக்குள் தடுப்பூசி மற்ற நாடுகளுக்கு அனுப்பி வைக்கப்படும் என அவர் தெரிவித் துள்ளார். மேலும் அவர் இது பற்றி பேசியபோது, ரஷ்யாவும், சீனாவும் தங்களது தடுப்பூசிக ளால் உலக நாடுகளிடம் செல்வாக்கு செலுத்த முயல்கின்றன என குற்றம் சாட்டினார்.



இந்த நிலையில் உலக நாடுகளுக்கு 8 கோடி கொரோனாத் தடுப்பூசிகளை பகிர்ந்தளிக் கும் அமெரிக்காவின் அறிவிப்பை சீனா வரவேற்றுள்ளது. அதேசமயம் ரஷ்யா மற்றும் சீனாவின் தடுப்பூசிகள் குறித்த ஜோ பைடனின் கருத்து வெறுக்கத்தக்கது எனவும் சீனா தெரிவித்துள்ளது. சீன வெளியுறவு அமைச்சகத் தின் செய்தி தொடர்பாளர் ஜாவோ லிஜியான் இது குறித்து கூறியதாவது:-

தடுப்பூசி உதவி மற் றும் வளரும் நாடுகளுக்கு உறுதியான உதவி ஆகி யவற்றின் உறுதிப்பாட்டை அமெரிக்கா வழங்க முடிந்தால் நாங்கள் அதை வரவேற்கிறோம்.

தடுப்பூசிகள் தொடர்பாக அமெரிக்கா சீனா வில் இருந்து ஒரு பிரச்சினையை உருவாக்கி வருகிறது. இது அமெரிக்க நடவடிக்கையின் உண்மையான நோக்கத்தையும், உந்துதலை யும் சந்தேகிக்கிறது. அமெரிக்காவைப் போலல் லாமல், சீனா உலகில் செல்வாக்கு செலுத்தவோ அல்லது வழி நடத்தவோ தடுப்பூசிகளை பயன்படுத்தாது. எங்கள் நோக்கம் உயிரை காப்பாற்ற முடிந்த வரை வளரும் நாடுகளுக்கு உதவுவதைத் தவிர வேறொன்றுமில்லை.- இவ்வாறு அவர் கூறினார்.

# பணக்கார நாடுகளுக்கும் ஏழை நாடுகளுக்கும் தடுப்பூசியில் இடைவெளி



## WHO கவலை

உயர் வருமானம் உள்ள செல்வ நாடுகளுக்கும் வருமானம் குறைவாக உள்ள ஏழை நாடுகளுக்கும் இடையே தடுப்பூசி போடுவதில் மிகப்பெரிய இடை வெளி காணப்படுவதாக உலக சுகாதார அமைப்பின் தலைமை இயக்குநர் டெற்றோஸ் அதானோம் கவலை தெரி வித்துள்ளார்.

பாரிஸ் அமைதி மாநாட்டில் பங் கேற்று உரை நிகழ்த்திய அவர், உலகின் 15 சதவீத மக்கள் தொகையை பெற்றுள்ள உயர் வருமானம் கொண்ட நாடுகளுக்கு உலகம் முழுவதும் உற்பத்தியாகும் தடுப்பூசிகளில் 45 சதவீத பங்கும், உலகின் பாதிக்கும் மேலான மக்கள் தொகை கொண்டுள்ள

வறுமையில் உள்ள நாடுகளுக்கு 17 சதவீதப் பங்கும் கிடைக்கின்றன எனத் தெரிவித்தார்.

எனவே இந்த இடைவெளி மிகப்பெரியது என்று டெட்ரோஸ் குறிப்பிட் டுள்ளார்.

# கொரோனாவின் வகைகளைக் கண்டறியும் புதிய ஆர்.டி. - பி.சி.ஆர். சோதனைக் கருவி

சர்வதேசப் பெருந்தொற்றுக்குக் காரணமான கொரோனா வைரஸின் பல் வேறு வகைகளைத் துல்லியமான முறையில் கண்டுபிடிக்கும் புதிய ஆர்.டி - பி.சி.ஆர். சோதனைக் கருவியை இந் திய அரசின் அறிவியல் மற்றும் தொழி நுட்பத்துறையின் கீழ் இயங்கும் தேசிய முக்கியத்துவம் வாய்ந்த நிறுவனமான ஸ்ரீ சித்திரத் திருநாள் மருத்துவ அறி வியல் மற்றும் ஆராய்ச்சி நிறுவனம் உருவாக்கியுள்ளது

இது குறித்து மத்திய அறிவியல் மற் றும் தொழிநுட்பத்துறை வெளியிட்டுள்ள தகவலின்படி, தனது பல்வேறு வகைக ளோடு பெருந்தொற்றின் இரண்டாம்



அலை தற்போது நிலவிவரும் நிலையில், கொரோனா வைரஸை கண்டறிவதற்காக இந்த புதிய பலமுனை ஆர்.டி. - பி.சி.ஆர். சோதனை முறை முக்கியத்துவம் பெறு கிறது என்றும் ஆர்.டி ஆர்.பி மற்றும் ஓ.ஆர்.எஃப்.பி - என்.எஸ்.பி.14 ஆகிய இரண்டு வித சார்ஸ் கோவி 2 மரபணுக் களையும் மனித ஆர்.என்.ஏ.எஸ்.ஈ.பி மரபணுவையும் இந்தப் பரிசோதனை முறை இலக்கு வைப்பதால் இதன்மூலம் பல்வேறு வைரஸ் வகைகளைக் கண்டறிய முடியும் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

புனேயில் உள்ள தேசிய வைராலஜி நிறுவனத்தில் இந்தக் கருவியைப் பரி சோதித்த இந்திய மருத்துவ ஆராய்ச்சிக் குழு, இது 97.3 சதவீத உணர்திறனுடனும் கொரோனாவைக் கண்டறிவதில் 100 சதவீத செயல் திறனுடனும் இருப்பதாக சான்றளித்துள்ளது.

இந்தக் கருவியை வர்த்தகமயப்ப டுத்துவதற்காக ஹைதராபாத்தை சேர்ந்த ஹுவெல் லைப் சயன்சஸ் நிறு வனத்துடனான ஒப்பந்தம் ஒன்றில் ஸ்ரீ சித்திரத் திருநாள் மருத்துவ அறிவியல் மற்றும் ஆராய்ச்சி நிறுவனம் கையெ முத்திட்டுள்ளது.

கொரோனாவுக்கு எதிரான இந்தி யாவின் போரில் இந்த பிரத்தியேக ஆர்.டி. - பி.சி.ஆர். சோதனைக் கருவி முக்கிய ஆயுதமாக இருக்கும் என்று அறிவியல் மற்றும் தொழிநுட்பத் துறையின் செய லாளர் பேராசிரியர் அசுதோஷ் சர்மா நம்பிக்கை தெரிவித்துள்ளார்.

# மனித நேயமிக்க மக்கள் பிரதிநிதி ஒருவரை நாம் இழந்து விட்டோம்

## கே.துரைரட்ணசிங்கம் இறப்புக்கு இம்ரான் மஹ்ரூப் விடுத்துள்ள அனுதாபச் செய்தி

(ஹஸ்பர் ஏ ஹலீம்)

திருகோணமலை மாவட்ட முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் கே.துரைரட்ணசிங்கம் அவர்களின் இறப்பின் மூலம் மனித நேயமிக்க மக்கள் பிரதிநிதி ஒருவரை நாம் இழந்து விட்டோம் என திருகோணமலை மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் இம்ரான் மஹ்ரூப் இன்று விடுத்துள்ள அனுதாபச் செய்தியில் தெரிவித்துள்ளார்.

துரைரட்ணசிங்கம் கல்வி அதிகாரியாகப் பணியாற்றி ஓய்வு பெற்றவர். இதன் மூலம் கல்விச் சமூகத்தின் மன தில் நீங்கா இடம் பிடித்தவர். அவரிடம் மனிதாபிமானமே மேலோங்கியிருந்தது. இதனால் இன, மத, பேத மற்ற செயற்பாடுகளை அவர் முன்னெடுத்து வந்தார்.

எனக்குத் தெரிந்தவரை பல முஸ்லிம் அன்பர்கள் அவருக்கு இருந்தார்கள். அவர்களோடு மிகவும் அன்பாகப் பழகி வந்தார். குடும்ப உறவினர் போல அவர்களது சுக துக்கங்களில் பங்கு பற்றி வந்ததை நான் அறிந்துள்ளேன். இன்றைய காலகட்டத்தில் இவரைப் போன்ற நல்ல பண்புள்ளவர்களை காண்பது அரிது.

அதிகாரமிக்க பதவிகளை அவர் வகித்து வந்தாலும் நல்ல பண்பும் பக்குவமும் அவரிடம் நிறைந்திருந்தன. இதனால் எல்லோரையும் மனிதர்களாக அவர் பார்த்தார். அவர் நாடாளுமன்ற உறுப்பினராக இருந்த காலத்தில் அவரது பன்முகப்படுத்தப்பட்ட நிதி ஒதுக்கீடுகளில் பள்ளிவாயில் அபிவிருத்திக்கும் நிதி ஒதுக்கீடுகளை அவர் செய்திருந்தமையை நான் நன்கு அறிவேன்.

உயிரினங்களைப் பொறுத்த வரை இந்த உலகம். நிரந்தரமில்லாதது. ஒவ்வொருவருக்கும் பிரிவதற்கான நேரம் வரையறுக்கப்பட்டுள்ளது. அவரவருக்கென ஒதுக்கப்பட்ட நேரத்தில் நாம் போய்த்தான் ஆக வேண்டும். அந்த வகையில் துரைரத்னசிங்கம் அவர்கள் இப்போது எம்மை விட்டும் பிரிந்து சென்றுள்ளார். இவரைப் போல நாமும் ஒருநாள் பிரிந்து செல்வோம் என்பது உறுதி.

இவரது மறைவின் மூலம் மனித நேயமிக்க ஒருவரை நாம் இழந்துள்ளோம். இனவாதமும், மதவாதமும் போசிக்கப்பட்டு வரும் இன்றைய காலத்தில் இவரது இழப்பு கவலையைத் தருகின்றது. இவரது மறைவின் மூலம் பெருங் கவலையடைந்திருக்கும் அவரது குடும்பத்தினருக்கு இறைவன் ஆறுதலைக் கொடுக்க வேண்டுமெனப் பிரார்த்திக்கிறேன். இவ்வாறு அவர் தெரிவித்துள்ளார்.



# காரைதீவில் அன்டிஜன் பரிசோதனை அனைத்தும் நெகட்டிவ் பெறுபேறு

காரைதீவில் நேற்று மேற்கொள்ளப்பட்ட அன்டிஜன் பரிசோதனையின் பெறுபேறுகள் அனைத்தும் நெகட்டிவ் பெறுபேற்றைத்தந்துள்ளன என காரைதீவு தலைமை பொதுச் சுகாதாரப் பரிசோதகர் சா.வேல்முருகு தெரிவித்தார்.

காரைதீவு கண்ணகை அம்மனாலய நிருவாகிகள் மற்றும் வீதி அபிவிருத்திப்பணிகளில் ஈடுபடும் தொழிலாளிகள் உள்ளிட்ட 30 பேருக்கு அன்டிஜன் சோதனை செய்யப்பட்டது. அனைவருக்கும் நெகடிவ் பெறுபேறு கிடைத்துள்ளது. இதைவிட மேலும் மூவருக்கு பி.சி.ஆர். சோதனையும் மேற்கொள்ளப்பட்டது.

கல்முனை பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் வைத்தியர் ஜீ.சுகுணனின் வேண்டுகோளுக்கிணங்க காரைதீவு சுகாதார வைத்திய அதிகாரி வைத்தியர் தஸ்லீமா தலைமையில் மேற்பார்வை பொதுச் சுகாதாரப் பரிசோதகர், அபிவிருத்தி உத்தியோகத்தர் இணைந்து மேற்கொள்ளப்பட்ட அன்டிஜன் பரிசோதனைகள் அனைத்தும் நெகட்டிவ் பெறு பேறுகள் கிடைக்கப் பெற்றுள்ளன.

# துரைரட்ணசிங்கத்தின் மறைவுக்கு கிழக்கு முன்னாள் ஆளுநர் அனுதாபம்



(ஹஸ்பர் ஏ ஹலீம் )

கிழக்கின் ஒரு சிறந்த அரசியல் தலைமையின் மறைவு பெரும் பேரிழப்பாகும் முன்னாள் எம்.பி. துரைரட்ணசிங்கத்தின் மறைவு குறித்த அனுதாபச் செய்தியில் கிழக்கின் ஒரு தலை சிறந்த அரசியல்வாதியை நாம் இழந்துள்ளோம் என முன்னாள் கிழக்குமாகாண ஆளுநரும் ,முன்னாள் வெளிவிவகார அமைச்சருமான ரோஹிதபோகொல்லாகம தெரிவித்துள்ளார்.

முன்னாள் திருகோணமலை மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் அமரர் க. துரைரட்ணசிங்கம் அவர்களின் மறைவு குறித்து நேற்று விடுத்துள்ள அனுதாபச் செய்தியில் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

இலங்கை நாடாளுமன்றத்தின் அன்றைய முதல் வருகையின் போது ஒன்றாக என்னுடன் பயணித்த ஒரு சிறந்த மனிதர் .இவரது ஆத்மா சாந்தியடையவும் இவரது குடும்பத்தாருக்கு உள அமைதியை பெறவும் வேண்டுகிறேன் இவரது மறைவு குறித்து கவலயடைகிறேன். ஆழ்ந்த அனுதாபத்தையும் தெரிவிக்கிறேன்.

இவர் தமிழ் மக்களுக்கான பிரதிநிதியல்லாமல் முழு சமூகத்துக்காகவும் ஒன்றிணைந்து செயற்பட்டவர் கிழக்கு ஆளுநராக இருந்த போதும் என்னுடன் உள்ள உறவு மறக்க முடியாது கிழக்கு மக்கள் மத்தியில் சமூகம்சார் பிரச்சினை தொடர்பிலும் முன்வைத்து சிறந்த அரசியல் தலைமைத்துவத்துக்கு முன்னுதாரணமாக திகழ்ந்தவர் என்றும் அவரது அனுதாபச் செய்தியில் மேலும் குறிப்பிடப்பட்டுள்ளது.

# மட்டக்களப்பு மாநகர சபை பிரதேசத்தில் திறக்கப்பட்ட மதுபானக் கடைகளுக்கு உடன் பூட்டு

மட்டக்களப்பு, மே 19

மட்டக்களப்பு மாநகர சபை பிரதேசத்திற்குட்பட்ட கல்லடி வேலூர், திருச்செந்தூர், பாலமீன்மடு, சின்ன ஊறணி ஆகிய கிராம சேவையாளர் பிரிவுகள் நேற்று தனிமைப்படுத்தப்பட் மருந்தகங்கள், வெதுப்பகங்கள், மரக்கறி, பழக்கடைகள், தவிர்ந்த அனைத்து வர்த்தக நிலையங்களும் உடன் அமுலுக்கு வரும் வகையில் மூடப்பட டுவதாக மாநகர முதல்வர் தியாகராஜா சரவணபவன் நேற்று அறிவித்திருந்தார்.

ஆனால் இன்று மட்டக்களப்பு பகுதியில் திடீரென திறக்கப்பட்ட மதுபான விற்பனை நிலையங்களால் பெரும் பரபரப்பு ஏற்பட்டது.

இந்தவிடயம் உடனடியாக மாநகர முதல்வர் தியாகராஜா சரவணபவனுக்கு தெரியப்படுத்தப்பட்டமையுடன் விரைந்து செயற்பட்ட முதல்வர் திறக்கப்பட்ட அனைத்து மதுபான நிலையங்களையும் உடனடியாக மூட நடவடிக்கை எடுத்தார், குறிப்பிட்ட சில மணிநேரத்தில் இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது.



# சுகாதார வழிமுறைகளை மீறிய இரண்டு கடைகளுக்கு பூட்டு

கல்முனை, மே 19

கல்முனை பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் வைத்தியர் ஜீ.சுகுணனின் உத்தரவின் பேரில் சாய்ந்தமருது சுகாதார வைத்திய அலுவலக சுகாதார வைத்திய அதிகாரி எம்.எம்.அல்.அமீன் றிசாட் அவர்களின் தலைமையில் சுகாதார வழிமுறைகளை பின்பற்றாத மற்றும் காலவதியான உணவுவகைகளை விற்பனை செய்த கடைகள் மேற்பார்வை செய்யப்பட்டன.

பொதுச் சுகாதாரப் பரிசோதகர் ஜே.நிஸ்தார் மற்றும் பொதுச் சுகாதாரச் பரிசோதகர் என்.எம்.பைலான் ஆகியோரின் நெறிப்படுத்தலின் கீழ் சுகாதார நடைமுறைகளை பின்பற்றாத கடைகள் மற்றும் உணவகங்கள் இன்று திடீர் சோதனைக்கு உட்படுத்தப்பட்டன.

சுகாதார வழிமுறைகளை பின்பற்றாத ஒரு ஆடை விற்பனை நிலையமும் சிறு கடை ஒன்றும் 14 நாள் மூடப்பட்டு வழக்குதாக்கல் செய்யப்பட்டதுடன் மேலும் பழுதடைந்த உணவு வகைகளை விற்பனை செய்த 2 கடைகளுக்கு எதிராகவும் வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

இக் கள விஜயத்தில் பொதுச் சுகாதாரப் பரிசோதகர்கள், அலுவலக உத்தியோகத்தர்கள் மற்றும் சாய்ந்தமருது பிரதேச செயலக பல்நோக்கு அபிவிருத்தி செயலனி திணைக்களத்தின் பயிலுநர் குழுவும் கலந்து கொண்டது.

# திருகோணமலை கத்தோலிக்க மறைக் கல்வி நடு நிலையத்தினால் நினைவேந்தல் நிகழ்வு





திருகோணமலை, மே 19

இறுதி யுத்தத்தில் உயிர் நீத்த உறவுகளுக்காக நினைவேந்தல் நிகழ்வு நேற்று திருகோணமலை கத்தோலிக்க மறைக் கல்வி நடு நிலையத்தில் இடம் பெற்றது.

சமூக அபிவிருத்தி கட்சியின் ஏற்பாட்டில் முன்னெடுக்கப்பட்ட குறித்த அஞ்சலி நிகழ்வில் முன்னாள் திருகோணமலை மறை மாவட்ட ஆயர் கிங்ஸ்லி சுவாமி பிள்ளை றொபேர்ட், மதுராங்கன் குரூஸ் மற்றும் தமிழ் தேசிய மக்கள் முன்னணியின் திருகோணமலை மாவட்ட செயற்பாட்டாளர் ஸ்ரீஞானேந்திரன் ஆகியோர்கள் பங்கேற்று மெழுகுவர்த்தியுடனான ஒளிச்சுடரேற்றி உணர்வு பூர்வமான முறையில் அஞ்சலி செலுத்தினர்.

இதில் இறுதி முள்ளிவாய்க்கால் யுத்தத்தின் போது உணவுக்காக பகிரப்பட்ட உப்பில்லா கஞ்சியினை நினைவு கோரும் முகமாக முள்ளிவாய்க்கால் கஞ்சியும் இதன் போது பகிரப்பட்டது.

காலைக்கதிர்
Kalaikkathir மாலைப்பதிப்பு





# பந்தைச் சேதப்படுத்திய விடயம் எமக்கு முன்கூட்டியே தெரியாது

## ஆஸ்திரேலிய கிரிக்கெட் அணி பந்துவீச்சாளர்கள் அறிக்கை

2018 இல் தென்னாபிரிக்காவுக்கு எதிராக கேப்டவுனில் நடைபெற்ற மூன்றாவது டெஸ்ட் போட்டியில் தென்னாபிரிக்க அணி துடுப்பெடுத்தாடிக் கொண்டிருந்த போது ஆஸ்திரேலியாவின் இளம் வீரரான பன்கிராஃப்ட், தன்னிடம் இருந்த சொரசொரப்புத் தன்மை கொண்ட பொருளை வைத்து பந்தைச் சேதப்படுத்த முயன்றன கமராக்களில் பதிவாகியது. அது குறித்து நடுவர்கள் விசாரணை செய்தபோது அந்தப் பொருளை அவர் தனது ஆடைக்குள் மறைத்து வைத்தமையும் ஆதாரங்களோடு கண்டறியப்பட்டது.

போட்டி முடிவடைந்ததும் நடத்தப்பட்ட விசாரணைகளில் அந்தக் குற்றச்சாட்டை அப்போதைய அணித் தலைவர் ஸ்மித், துணைத் தலைவர் டேவிட் வோர்னர், பன்கிராஃப்ட் ஆகியோர் ஒப்புக் கொண்டனர். அத்துடன், ஸ்மித்தும், டேவிட் வோர்னரும் அணியில் தங்களுக்கு வழங்கப்பட்டிருந்த பொறுப்புகளிலிருந்து விலகுகிறோம் எனவும் அறிவித்தனர். அவர்கள் இருவருக்கும் ஓராண்டு காலம் போட்டிகளில் பங்கேற்கத் தடை விதித்தது ஆஸ்திரேலிய கிரிக்கெட் சபை. பன்கிராஃப்டுக்கு 9 மாத காலம் கிரிக்கெட் விளையாடத் தடை விதிக்கப்பட்டது. அவர்களுடைய பெயர்கள் ஒப்பந்தப் பட்டியலில் இருந்தும் நீக்கப்பட்டன.

தடைக்காலம் முடிந்த பிறகு ஸ்மித்தும் வோர்னரும் ஆஸ்திரேலிய அணியிலும் பிக் பாஷ் லீக், ஐ.பி.எல். உள்ளிட்ட ரி - 20 தொடர்களிலும் விளையாடி வருகிறார்கள். 2019 க்குப் பிறகு ஆஸ்திரேலிய தேசிய அணியில் பன்கிராஃப்ட்டுக்கு வாய்ப்பு வழங்கப்படவில்லை. இங்கிலாந்தில் கழகப் போட்டிகளில் விளையாடிவரும் இவர், அண்மையில் அளித்த பேட்டியில், பந்தைச் சேதப்படுத்தும் முயற்சிகளைப் பந்துவீச்சாளர்கள் அறிந்திருக்க வாய்ப்பிருந்ததாகக் கூறியிருந்தார். இந்த விடயம் பல்வேறு தரப்பிலும் பல கேள்விகளை எழுப்பியிருந்தது. இந்த விவகாரம் தொடர்பாக தகவல்களைப் பெறவும் அதனடிப்படையில் விசாரணைகளைத் தொடரவும் தயாராக இருப்பதாக ஆஸ்திரேலிய கிரிக்கெட் சபையும் தெரிவித்திருந்தது.

இதையடுத்து, அந்த டெஸ்ட் போட்டியில் விளையாடிய ஆஸ்திரேலியப் பந்துவீச்சாளர்களான பட் கம்மின்ஸ், மிட்ச்செல் ஸ்டார்க், ஹசில்வுட், நதன் லயன் ஆகியோர் இணைந்து அறிக்கையொன்றை வெளியிட்டுள்ளார்கள். அதில் அவர்கள், ‘நேர்மையுடன் விளையாடுவதைப் பெருமையாகக் கொள்கிறோம். அதனால், 2018 இல் கேப்டவுன் டெஸ்ட் தொடர்பான எங்களுடைய நேர்மையான செயல்களைச் சில பத்திரிகையாளர்களும் முன்னாள் வீரர்களும் கேள்வி கேட்பது ஏமாற்றமாக உள்ளது. இந்த விவகாரம் தொடர்பாகப் பலமுறை பதில் அளித்துள்ளோம். ஆனால், மீண்டும் மீண்டும் பதில் அளிக்கக் கட்டாயப் படுத்தப்படுகிறோம். பந்தைச் சேதப்படுத்துவதற்காக ஒரு பொருள் மைதானத்துக்குக் கொண்டுவரப்பட்டது எங்களுக்குத் தெரியாது. மைதானத்தின் பெரிய திரையில் காண்பிக்கப்பட்டபோதுதான் அதைப் பற்றி எங்களுக்குத் தெரியும்.

ஆதாரம் இல்லையென்றாலும் நாங்கள் பந்துவீச்சாளர்கள் என்பதால் எங்களுக்கு இதைப் பற்றித் தெரியும் என எண்ணுபவர்களுக்கு சில விடயங்கள் - அன்று பணியாற்றிய இரு அனுபவமிக்க நடுவர்களும் திரையில் அக்காட்சிகளைக் காண்பித்த பிறகு பந்தை வாங்கிப் பரிசோதித்துப் பார்த்தார்கள். பந்தில் சேதாரம் எதுவும் இல்லாததால் பந்தை அவர்கள் மாற்றவில்லை. அதற்காக மைதானத்தில் அன்று நடந்த விடயத்துக்கு மன்னிப்புக் கிடையாது. அன்று நடந்தது தவறுதான். அது நிச்சயம் நடந்திருக்கக்கூடாது. வதந்திகளுக்கு முற்றுப்புள்ளி வையுங்கள் எனக் கோரிக்கை விடுக்கிறோம். இந்த விடயம் பற்றிய கதைகள் தொடர்ந்துகொண்டே இருக்கின்றன. இதிலிருந்து அடுத்த கட்டத்துக்கு நாம் நகர வேண்டும்‘ என்று தெரிவித்துள்ளனர்.

# ஏ.பி.டி. தனது ஓய்வு முடிவை மீளப்பெற விரும்பவில்லை

## தென்னாபிரிக்க கிரிக்கெட் சபை தகவல்



சர்வதேச கிரிக்கெட் போட்டிகளிலிருந்து ஓய்வு பெறுகிறேன் 2018 மே மாதத்தில் தென்னாபிரிக்க அணியின் அதிரடித் துடுப்பாட்ட வீரர் ஏ.பி.டி. வில்லியர்ஸ் திடீரென சமூகவலைத்தளங்களின் வழியாக அறிவித்தார். சர்வதேச கிரிக்கெட்டிலிருந்து ஓய்வு பெற்றபின்னர், ரி - 20 லீக் போட்டிகளில் சிறப்பாக விளையாடி வரும் டி.வில்லியர்ஸை மீண்டும் தென்னாபிரிக்க தேசிய அணியில் இடம்பெற வைத்து, ரி - 20 உலகக் கிண்ணத் தொடரில் விளையாட வைக்கும் முயற்சிகள் நடைபெற்று வந்தன.

2019 ஒருநாள் சர்வதேச உலகக் கிண்ணப் போட்டிக்கான தென்னாபிரிக்க அணியில் இடம்பெற டி.வில்லியர்ஸ் விருப்பம் தெரிவித்திருந்தார். எனினும் அவருடைய விருப்பத்தை அணித் தேர்வுக்குழு நிராகரித்திருந்தது. 10 நாடுகள் பங்கேற்ற அப்போட்டித் தொடரில் தென்னாபிரிக்க அணிக்கு ஏழாமிடமே கிடைத்தது.

ஐ.பி.எல். 2020 தொடரில் 14 ஆட்டங்களில் 454 ஓட்டங்களைக் குவித்தார் டி.வில்லியர்ஸ். இந்த வருட ஐ.பி.எல். தொடரில் 7 ஆட்டங்களில் 2 அரைச் சதங்களுடன் 164.28 என்ற ஓட்ட வேகத்தில் 207 ஓட்டங்களை எடுத்திந்தார்.

இந்த நிலையில், ஓய்வு அறிவிப்பைத் திரும்பப் பெற டி வில்லியர்ஸ் விருப்பம் தெரிவிக்கவில்லை என்று தென்னாபிரிக்க கிரிக்கெட் சபை தகவல் வெளியிட்டுள்ளது. இதனால் அணியில் மீண்டும் அவர் இடம்பெறுவதற்கான பேச்சு முடிவுக்கு வந்துள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. இம் முறை ஐ.பி.எல். தொடர் நிறைவுக்கு வந்ததும் தேசிய அணியில் மீண்டும் இணைவதற்கான வாய்ப்புகள் பற்றி தென்னாபிரிக்க தேசிய அணியின் பயிற்சியாளர் மார்க் பௌச்சருடன் கலந்துரையாடவுள்ளதாகவும்,

அப்போது தனது தற்போதைய ஆட்டத்தரம், உடல் தகுதி போன்றவையும் அணியில் இடம்பெறுவதற்கான வாய்ப்பினைத் தீர்மானிக்கும் காரணிகளாக இருக்குமென்றும் டி.வில்லியர்ஸ் முன்னதாகத் தெரிவித்திருந்தார்.


அணியில் விளையாடும் பதினொருவரில் வெற்றிடம் இருந்தால் மட்டுமே தனது மீள் இணைவு சாத்தியமாகுமென்றும் அவ்வாறு ஒரு இடைவெளி தற்போதைய அணியில் இருக்கக்கூடாது என எதிர்பார்க்கிறார் எனவும் அவர் தனது எண்ணத்தை வெளிப்படுத்தியிருந்தமை குறிப்பிடத்தக்கது.

# ஓராண்டுக்குப் பின்னர் களமிறங்கிய போட்டியில்

## ரோஜர் பெடரர் தோல்வியடைந்தார்

காயங்கள் அதனால் மேற்கொள்ள வேண்டிய அறுவை சிகிச்சைகள் காரணமாக ஓய்விலிருந்த சுவிஸ் டென்னிஸ் நட்சத்திரம் ரோஜர் பெடரர் ஓராண்டுக்குப் பின்னர் நேற்று ஜெனிவா ஓபின் டென்னிஸ் தொடரில் மீண்டும் களமிறங்கியிருந்தார்.

2020 ஆஸ்திரேலிய ஓபின் தொடரில் அரையிறுதி வரை முன்னேறிய பெடரர், அப்போது ஏற்பட்ட முழங்கால் காயத்திற்காக சத்திரசிகிச்சை செய்து கொண்டார். அதன் பின்னர் 2020 மார்ச்சில் கட்டார் ஓபின் காலிறுதியில் நிகோலஸ் பசிலாஷ்விலியிடம் 3 - 6, 6 - 1, 7 - 5 என்ற செட்களில் தோல்வியடைந்திருந்தார். அதன் பின்னர் மீண்டும் சத்திர சிகிச்சைகள், கொரோனா பரவல் போன்றவை காரணமாக கிராண்ட் ஸ்லாம் போட்டிகளில் மட்டுமன்றி, முதல் தர சர்வதேசப் போட்டிகளிலும் அவர் பங்கேற்கவில்லை. மீண்டும் போட்டிகளில் பங்கேற்கப் போவதாக கடந்த ஜூலையில் அறிவித்தார். அதற்காக டுபாயில் கடுமையான பயிற்சிகளை மேற்கொண்டுவந்தார். ஆனாலும், அவர் எந்தப்போட்டியிலும் பங்கேற்றிருக்கவில்லை.



ஓராண்டாக எந்தப் போட்டியிலும் பங்கேற்காததால், உலகத் தரவரிசையில் கடந்த ஆண்டு 6 ஆவது இடத்தில் இருந்த பெடரர் இப்போது 8ஆவது இடத்துக்குத் தள்ளப்பட்டார்.

இந்த நிலையில், சுவிட்ஸர்லாந்தில் நடக்கும் ஜெனிவா ஓபின் டென்னிஸ் போட்டித் தொடரின் 2 ஆவது சுற்றில் நேற்று நேரடியாகக் களமிறங்கிய அவர் 4 - 6, 6 - 4, 4 - 6 என்ற செட் கணக்கில் ஸ்பெயினின் பாப்லோ அந்துஜாரிடம் போராடித் தோற்றார். விறுவிறுப்பான இப்போட்டி 1 மணித்தியாலம், 51 நிமிடங்கள் வரை நீடித்தது.

20 கிராண்ட்ஸ்லாம் பட்டங்களை வென்ற சாதனை வீரரான 39 வயதுடைய பெடரர், விம்பிள்டன் னில் 8, ஆஸ்திரேலியா ஓபினில் 6, அமெரிக்க ஓபினில் 5, பிரெஞ்ச் ஓபினில் ஒரு முறை சம்பியன் ஆகியுள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது.

காலைக்கதிர் Kalaikkathir மாலைப்பதிப்பு



# கிளிநொச்சி ஆடைத்தொழிற்சாலைகளில் கொரோனா பரவினால் மாவட்டமே அழியும்

## பொது அமைப்புக்கள் எச்சரிக்கை

கிளிநொச்சியில் உள்ள இரண்டு ஆடைத் தொழிற்சாலைகளில் கொரோனா வைரஸ் தொற்று தீவிரமாகப் பரவினால் மாவட்ட மக்கள் பேராபத்தை எதிர்கொண்டு மாவட்டமே அழிந்துவிடும் என பொது அமைப்புக்கள் எச்சரிக்கை விடுத்துள்ளன.

இந்நிலையில், உடனடியாகக் குறித்த ஆடைத் தொழிற்சாலைகளை மூடி மக்களைக் காப்பாற்ற நடவடிக்கை எடுக்கவேண்டும் எனவும் கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

அத்துடன், நடவடிக்கை எடுக்காமல் ஏற்படும் பாரிய இழப்புக்களுக்கு மாவட்ட அரசாங்க அதிபரும் சுகாதார ஊழியர்களுமே பொறுப்புக்கூற வேண்டும் எனவும் கிளிநொச்சி மாவட்ட பொது அமைப்புக்கள் குறிப்பிட்டுள்ளன.

கிளிநொச்சி மாவட்ட பொது அமைப்புக்கள் சார்பில் ஊடக சந்திப்பொன்று நேற்று செவ்வாய்க்கிழமை கிளிநொச்சி ஊடக மையத்தில் நடைபெற்றது.

இதன்போது, பொது அமைப்புக்கள் சார்பில், கரைச்சி மாதர் கிராம அபிவிருத்தி சங்கங்களின் தலைவர் கருப்பையா ஜெயக்குமார் இவ்வாறு கோரிக்கை விடுத்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில் -

கடந்த திங்கட்கிழமை முடிவுகளின் படி புதுக்குடியிருப்பு ஆடைத்தொழிற்சாலையில் 310 தொற்றாளர்கள் அடையாளம் காணப்பட்டுள்ளனர்.

அவ்வாறு குறித்த தொற்றாளர்கள் அடையாளம் காணும்வரை அந்த நிர்வாகம் சரியாகக் கையாளவில்லை. அவர்களுக்காக பி.சி.ஆர். உள்ளிட்ட விடயங்களை சரியான முறையில் கையாண்டிருந்தால் இவ்வளவு பெருந்தொகையான தொற்றாளர்கள் அடையாளம் கண்டிருக்க மாட்டார்கள்.

குறித்த தொற்றாளர்கள் அடையாளம் காணப்படுவதற்குக் காரணம் அந்த நிர்வாகமேயாகும். பாதிக்கப்பட்ட பணியாளர்கள் மற்றும் அவர்களது குடும்பங்களுக்கு குறித்த ஆடைத் தொழிற்சாலை நிறுவனம் பெருந்தொகையான நட்ட ஈட்டினை வழங்க வேண்டும்.

இதேவேளை, கிளிநொச்சி மாவட்டத்தில் உள்ள இரண்டு ஆடைத் தொழிற்சாலைகளில் சுமார் இரண்டாயிரத்துக்கும் மேற்பட்ட பணியாளர்கள் வேலை செய்கின்றார்கள்.

குறித்த ஆடைத் தொழிற்சாலைகள் இரண்டிலும், புதுக்குடியிருப்பில் இருக்கின்ற ஆடைத்தொழிற்சாலை போன்று தொற்று பரவுமானால் கிளிநொச்சி கடுமையான பாதிப்புக்குள்ளாகும். ஆகவே, இதனை சாதாரணமான விடயமாக எடுத்துக்கொள்ள முடியாது.

இவ்வாறான ஆபத்தான நிலையைத் தடுப்பதற்கு இங்குள்ள சுகாதாரத் துறையினருக்கும், மாவட்ட அரசாங்க அதிபருக்கும் முக்கிய பொறுப்புள்ளது.

அண்மையில் மூன்று நாள்கள் பயணக் கட்டுப்பாடு விதிக்கப்பட்டிருந்த போதும் ஆடைத் தொழிற்சாலை இயங்கியதாகவே அறியக் கிடைக்கின்றது.

இந்த ஆடைத் தொழிற்சாலைகளில் அபாயகரமான தொற்று உருவாகுமாக இருந்தால் அது எமது மாவட்டத்தையே அழித்துவிடும்.

தொற்று வருமுன்னே எமது மாவட்டத்தைப் பாதுகாக்க வேண்டும் அல்லது சொற்பமாக வந்ததை அடியோடு அழிக்க வேண்டுமென்றால் உடனடியாக கிளிநொச்சியில் இருக்கின்ற இரண்டு ஆடைத்தொழிற்சாலைகளையும் மூட வேண்டும்.

இதேவேளை நீண்ட காலமாக பணியாளர்களாக இருந்த அவர்களுக்கு சம்பளத்துடனான விடுமுறையை குறித்த ஆடைத்தொழிற்சாலைகள் வழங்க வேண்டும்.

இதனைவிட, அனைத்து ஆடைத்தொழிற்சாலை ஊழியர்களுக்கும் பி.சி.ஆர். பரிசோதனை மேற்கொள்ளப்பட வேண்டும். அவ்வாறு செய்தால்தான் மாவட்டத்தில் எவ்வாறான தொற்றுநிலை காணப்படுகின்றது என்பதை அறிய முடியும்.

அவ்வாறு இல்லாது அசமந்தப் போக்காக இருந்தால் மாவட்டத்திற்கு பாரிய அழிவு ஏற்படும்.

மாவட்டத்தில் தொற்று அபாய நிலை முழுமையாக நீங்கும்வரை குறித்த இரண்டு ஆடைத் தொழிற்சாலைகளையும் தற்காலிகமாக மூட வேண்டும் என்பது இன்றைய முக்கிய நிலையாகும்.

இது தொடர்பாக மாவட்ட சுகாதாரத் துறையினரும் அரசாங்க அதிபரும் விசேட கவனம் செலுத்த வேண்டும்.

ஏற்கனவே எமது இனத்தின் ஒரு பகுதியை இழந்து நிற்கின்றோம். இந்நிலையில், கொவிட் தொற்று பரவலால் உயிரிழப்புக்கள் ஏற்பட்டால் கணிசமான தமிழர்கள் இல்லாது போகும் நிலை காணப்படுகின்றது என அவர் பொது அமைப்புக்கள் சார்பில் எச்சரிக்கை விடுத்துள்ளார்.

# துறைமுக நகரில் முதலாவது முதலீடு மேற்கொள்ள தயாராகிறது இலங்கை



கொழும்பு துறைமுக நகரத்தில் முதலாவது முதலீட்டை மேற்கொள்ள இலங்கை முதலீட்டு சபை தயாராக உள்ளதாக அரசாங்க நிதி பற்றிய குழுவில் புலப்பட்டது.

இது தொடர்பாக இலங்கை நாடாளுமன்றம் (தொடர்பாடல்) வெளியிட்டுள்ள ஊடக அறிக்கையில், பத்தாயிரம் கோடி அமெரிக்க டொலர் முதலீட்டிலான கொழும்பு துறைமுக நகரத்தின் முதலாவது திட்டம் இரண்டு கட்டங்களாக நடைமுறைப்படுத்தப்படவுள்ளமை நாடாளுமன்ற உறுப்பினர் அநுர பிரியதர்ஷன யாப்பா தலைமையில் அண்மையில் நாடாளுமன்றத்தில் நடைபெற்ற அரசாங்க நிதி பற்றிய குழுக் கூட்டத்தில் புலப்பட்டது.

2025 ஆம் ஆண்டு பூர்த்தி செய்யப்படவுள்ள இந்த கொழும்பு சர்வதேச நிதிசார் நிலையமானது அதன் முதலாவது கட்டத்தில் ஒரு சர்வதேச ஏ தரம் கொண்ட உயர்நிலை அலுவலகக் கோபுரம், இரண்டு உயர்முனை வதிவிடக் கோபுரங்கள் மற்றும் ஒரு சில்லறை நெடுமேடைப் பீடம் ஆகியவற்றைக் கொண்டிருக்கும். இரண்டாவது கட்டம் இரண்டு சர்வதேச ஏ தரம் கொண்ட உயர்நிலை அலுவலகக் கோபுரங்கள், ஒரு சில்லறை நெடுமேடைப் பீடம் ஆகியவற்றைக் கொண்டிருக்கும்.

இதில் தேர்ச்சியற்ற தொழிலாளர் தேவைப்பாடு, உயர்நிலை வேலையாள்களின் தேவைப்பாட்டில் உள்நாட்டில் 75 வீதமானவர்களுக்கு சந்தர்ப்பம் வழங்கப்படுவதுடன், தேர்ச்சிபெற்ற தொழிலாளர் தேவைப்பாட்டில் உள்நாட்டில் 65 வீதமானவர்கள் இணைத்துக்கொள்ளப்பட வேண்டும் என செயல்நுணுக்க அபிவிருத்திக் கருத்திட்டங்கள் சட்டத்தின் கீழான கட்டளையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

இருந்தபோதும் பல வரிச்சலுகைகள் வழங்கப்படும் இத்தகைய திட்டங்கள் நாட்டின் ஒட்டுமொத்த பொருளாதாரத்துக்கு நேரடியான பங்களிப்புக்களைச் செலுத்த வேண்டும் என முதலீட்டுச் சபைக்குச் சுட்டிக்காட்டிய அரசாங்க நிதி பற்றிய குழு, இதற்குத் தனது அனுமதியையும் வழங்கியது.

இதனைவிட, அம்பாந்தோட்டை துறைமுகத்தின் உட்பகுதியில் எதிர்வரும் ஜூலை மாதம் ஆரம்பிக்கப்படவிருக்கும் சிலோன் டயர் மெனுபக்ஷரிங் கம்பனி (பிரைவட்) லிமிடெட் என்ற பெயரில் ஏற்றுமதித் தரத்திலான டயர்களை உற்பத்தி செய்யும் ஆலைக்கும் அரசாங்க நிதி பற்றிய குழு தனது அனுமதியை வழங்கியது.

இத்திட்டம் 36 மாதங்களுக்குள் அது தனது வர்த்தகத் தொழிற்பாடுகளை ஆரம்பித்தல் வேண்டும். இத்திட்டத்துக்காக நீண்டகால பாரிய வரிச் சலுகைகள் வழங்கப்படுவதால், இதனால் ஏற்படக்கூடிய நன்மைகள் அடிமட்டத்தில் உள்ள இறப்பர் உற்பத்தியாளர்களுக்குச் செல்லவிருக்கின்றது எனவும் முதலீட்டுச் சபையின் தலைவர் கலாநிதி சஞ்சய மொஹட்டால, நாடாளுமன்ற உறுப்பினர்களுக்குச் சுட்டிக் காட்டினார்.

நாட்டின் இறப்பர் உற்பத்தியை படிப்படியாக அதிகரிப்பது தொடர்பில் நாடாளுமன்ற உறுப்பினர் அநுர பிரியதர்ஷன யாப்பா, முதலீட்டுச் சபையின் தலைவரிடம் வினவினார். இலங்கையின் தேசிய உற்பத்திகள் ஏனைய நாடுகளின் உற்பத்திகளுடன் ஒப்பிடும்போது அதிக விலையுடன் காணப்படுகின்றமை தொடர்பாக இராஜாங்க அமைச்சர் சுசில் பிரேமஜயந்த சுட்டிக்காட்டியமையுடன், வெளிநாட்டு நிறுவனங்களுக்கு வழங்கப்படும் வரிச் சலுகைகள் இந்நாட்டில் உள்ள தொழிலாளர்களுக்கும் சென்றடைய வேண்டும் என இராஜாங்க அமைச்சர் விதுர விக்ரமநாயக்க தெரிவித்தார்.

இந்தக் கூட்டத்தில் முதலீட்டுச் சபையின் தலைவர் கலாநிதி சஞ்சய் மொஹட்டால தொழில் திறனுடன் செயற்பட்டுவருவதை நாடாளுமன்ற உறுப்பினர் கலாநிதி ஹர்ஷ டி சில்வா உள்ளிட்ட குழுவின் உறுப்பினர்கள் அனைவரும் பாராட்டியிருந்தனர்.

அரசாங்க நிதி பற்றிய குழுக் கூட்டத்தில் அமைச்சர் சரத் வீரசேகர, இராஜாங்க அமைச்சர்களான சுசில் பிரேமஜயந்த, விதுர விக்ரமநாயக்க, கலாநிதி நாளக கொடஹேவா மற்றும் நாடாளுமன்ற உறுப்பினர்களான டிலான் பெரேரா, எம்.ஏ.சுமந்திரன், கலாநிதி ஹர்ஷ டி சில்வா, நளின் பண்டார, அனுப பஸ்குவல், பேராசிரியர் ரஞ்சித் பண்டார, இசுறு தொடங்கொட, சஹன் பிரதீப் ஆகியோர் கலந்துகொண்டனர்.

தற்பொழுது நிலவும் கொவிட் 19 சூழ்நிலையில் சுகாதார பாதுகாப்பு விதிமுறைகளுக்கு அமைய அரசாங்க கணக்குகள் பற்றிய குழுவில் அரசாங்க அதிகாரிகள் ஒன்லைன் தொழில்நுட்பத்தின் ஊடாக இணைத்துக்கொள்ளப்பட்டமை விசேட அம்சமாகும்.

# அரசின் தற்போதைய தேவை சீனாவை மகிழ்விப்பதே ஆகும்

## எதிர்க்கட்சி எம்.பி. சுஜித் சஞ்சய பெரேரா காட்டம்

கொவிட் நிலைமையை கட்டுப்படுத்துவதற்கு 3 நாள்கள் மாத்திரம் நாட்டை முடக்குவது போதுமானதல்ல. எனினும் நாட்டில் தற்போது காணப்படுகின்ற அபாய நிலையைக் கருத்திற் கொள்ளாமல் துறைமுக நகர பொருளாதார சட்டமூலத்தை நிறைவேற்றி, சீனாவை மகிழ்ச்சிப்படுத்துவதே அரசாங்கத்தின் தற்போதைய தேவையாகவுள்ளது என்று ஐக்கிய மக்கள் சக்தியின் நாடாளுமன்ற உறுப்பினர் சுஜித் சஞ்சய பெரேரா தெரிவித்தார்.

கொழும்பிலுள்ள எதிர்க்கட்சிக் தலைவர் அலுவலகத்தில் நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் இதனைத் தெரிவித்த அவர் மேலும் கூறுகையில் -

தற்போது பி.சி.ஆர். பரிசோதனைகள் குறைவாகவே முன்னெடுக்கப்படுகின்றன. பி.சி.ஆர். பரிசோதனைகளின் அளவு அதிகரிக்கப்பட்டால் தொற்றாளர் எண்ணிக்கையும் அதிகரிக்கும். நாட்டில் தற்போது காணப்படுகின்ற உண்மையான கொவிட் நிலைவரங்களை மறைப்பதற்கு அரசாங்கம் முயற்சிக்கிறது.

கொவிட் நிதியத்துக்கு கிடைக்கப்பெற்ற 1,700 கோடி நன்கொடை பிரயோசனமற்ற வகையில் செலவிடப்பட்டுள்ளது. இந்த நிதியிலும் அரசாங்கத்தின் சுரண்டல் இடம்பெற்றுள்ளதா என்று மக்கள் மத்தியில் சந்தேகம் எழுந்துள்ளது. இதில் மாத்திரமன்றி வெளிநாடுகளிலிருந்து இலங்கையர்களை அழைத்து வரல் , தனிமைப்படுத்தல் என்பவற்றிலும் அரசாங்கத்தின் சுரண்டல் இடம்பெற்றுள்ளது.

கொவிட் தொற்று தீவிரமடைய ஆரம்பித்த போதே நாட்டை முடக்குமாறு நாம் வலியுறுத்தினோம். எனினும் பொருளாதாரத்தை காரணம் காட்டி அரசாங்கம் அதனைப் புறக்கணித்தது. தற்போது நாம் கூறியதையே செய்ய வேண்டிய நிலைக்கு அரசாங்கம் தள்ளப்பட்டுள்ளது.

எவ்வாறிருப்பினும் 3 நாள்கள் மாத்திரம் நாட்டை முடக்குவதால் கொவிட் நிலைமையைக் கட்டுப்படுத்த முடியாது. துறைமுக நகர சட்டமூலத்தை நிறைவேற்றுவதற்கு நாடாளுமன்றத்தை கூட்ட வேண்டும் என்பதற்காகவே போக்குவரத்து கட்டுப்பாடுகள் தளர்த்தப்பட்டுள்ளன.

மக்களின் உயிரை விட துறைமுக நகர பொருளாதார சட்டமூலத்தை நிறைவேற்றி, சீனாவை மகிழ்ச்சிப்படுத்துவதே அரசாங்கத்தின் தற்போதைய தேவையாகவுள்ளது.-என்றார்.

# தடுப்பூசிக்குப் பதிய புதிய இணையத்தளம்

சுகாதார அமைச்சு மற்றும் இலங்கை தகவல் மற்றும் தொடர்பாடல் தொழிநுட்ப நிறுவனம் இணைந்து இந்நாட்டில் கொவிட் தடுப்பூசி வழங்கும் வேலைத்திட்டத்தை செயல்திறன் மிக்கதாக முன்னெடுக்க புதிய வேலைத்திட்டம் ஒன்றை ஆரம்பித்துள்ளனர்.

அதன்படி, கொவிட் தடுப்பூசியை பெற்றுக் கொள்ள எதிர்பார்க்கும் மக்களின் வசதிக்காக இணையத்தளம் ஒன்றை வடிவமைக்க நடவடிக்கை எடுத்துள்ளனர்.

மக்கள் பதிவு செய்து கொவிட் தடுப்பூசியை பெற்றுக் கொள்வதற்கான இந்த இணையத்தளம் எதிர்வரும் இரண்டு நாள்களில் வெளியிடப்படவுள்ளது. இந்த வேலைத்திட்டம் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவின் அறிவுறுத்தலுக்கு அமைய அமைச்சர் நாமல் ராஜபக்ஷவால் ஒருங்கிணைக்கப்பட்டுள்ளது.

புதிய இணையத்தளம் ஊடாக பொதுமக்கள் தடுப்பூசியை பெற்றுக் கொள்வதற்கான திகதி, நேரம் மற்றும் மத்திய நிலையம் ஒன்றை ஒதுக்கிக்கொள்ள சந்தர்ப்பம் ஏற்படுத்தப்பட்டுள்ளது. இதனூடாக சர்வதேச அளவில் அங்கீகரிக்கப்பட்ட ‘தடுப்பூசி சான்றிதழை’ பெறுவதற்கான வாய்ப்பையும் அவர்கள் பெறுகிறார்கள்.

இந்நாளிதழ் யாழ்ப்பாணம் இல.30 இந்துக் கல்லூரி வீதியிலுள்ள Green Media House Pvt Ltd. நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 19.05.2021இல் வெளியிடப்பெற்றது.